# காமராஜர் கருத்தைக் கேலி செய்யும் கனம்!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (10—11—49) வெளியூர் (11—11—49) | இதழ் 87

## மக்கள் கருத்துக்கு மதிப்பளிப்பதே மக்களாட்சி முறை

## மற்றத் துறைகளிலும் இப்பெரு நோக்குக் கொள்ளட்டும்

## பணம் பாழாகும் பிர்க்கா திட்டம் தொலையட்டும்!

### கேள்வி

"பிர்க்கா முன்னேற்றத் திட்டத்தால் பொது மக்களின் பணந்தான் பாழாகிறதென்றும், அத்திட்டத்தை உடனடியாக சர்க்கார் கைவிடவேண்டுமென்றும், சில நாளைககு முன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கூறியுள்ளது சர்க்காருக்குத் தெரியுமா?" —கே. டி. கோசலராம—

### பதில்

"அது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரின் கருத்து. நூற்றுக்கணக்கான கிராம மக்களுடையவும், சில சட்டசபை உறுப்பினர்களுடையவும் விருப்பததிற்கு இணங்கி, மேலும் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் இரண்டு இரண்டு பிர்ககாக்களில், பிர்ககா முன்னேற்றத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர சர்க்கார் முன்வந்திருக்கிறது."

—மந்திரி பரமேஸ்வரன்—

### அறிவுரை

"நாமெல்லாம் தொழில் துறையில் ஈடுபட்டவர்கள். ஒரு பெரிய திட்டத்தை ஆரம்பிக்கும்போது, அது பலனளிக்குமா என்று பார்ப்பதுண்டு. நான் ஒரு மந்திரியாக இருந்து, திட்டம நல்ல பலனைக் கொடுக்காது என்று தெரிந்துகொண்டால், மந்திரிக் குழுவினருக்கு, அதனை அறிவித்துவிடுவேன்." —பி. நடேசன—

### அலட்சியம்!

"இது வர்த்தக சபை கூட்டமல்லவென்பதை உறுப்பினர் அறியவேணடும். இது சட்டசபை கூட்டம். மந்திரிகளின் சொந்த கருத்துக்களைக் கேட்கக் கூடாது"

—சட்டசபை தலைவர்—

### கேள்வி

"தங்களுக்குத் தேவையானவைகளைத் தாங்களே உற்பத்தி செயதுகொள்ளும்படியானதாக இந்தத் திட்டம் கிராமங்களைச் செயதிருக்கிறது என்பதை மந்திரி திருப்திகரமாக உணர்ந்தாரா?" —பி. எஸ். மூர்த்தி—

### பதில்

"இந்த வேலை வெற்றியாகத்தான் நடத்தப்பட்டு வருகிறது; ஆனால் இதன் பலன் வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கலாம். திருமங்கலம், ஓங்கோல முதலிய இடங்களை நேரில் சென்று பார்த்தால், அங்குள்ள கிராம மக்கள் இத்திட்டத்தில் காட்டும உற்சாகத்தை உறுப்பினர்கள் புரிந்துகொள்வார்கள்"

—மந்திரி பரமேஸ்வரன்—

### கேள்வி

"எல்த் இன்ஸ்பெக்டர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், மைனர் இரிகேஷன் ஓவர்சியர், பெரும் ரஸ்தா மேற்பார்வையாளர்களின் அலுவல்களையே, இந்த பிர்க்கா திட்ட அதிகாரிகளும் செய்கிறார்கள் என்பதை சர்ககார் உணருகிறதா?" —எம். ஜே. சாமயூல்—

### பதில்

"கிராம முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு சர்க்கார் அதிகாரியுந்தான தனது பங்கைசசெய்தாக வேண்டும்," —மந்திரி—

### கேள்வி

"கிராமத்தின் சுயதேவைப் பூர்த்திதானே பிர்க்கா திட்டத்திலுள்ள முக்கியப் பகுதி? எந்த பிர்க்காவிலாவது இது வெற்றிபெற்றிருக்கிறதா? —ஆர். ஏ. அன்சாரி—

### பதில்

"சில பிர்க்காக்களிலே அந்த குறிக்கோள் வெற்றிபெற்றிருக்கிறது." —மந்திரி—

"பிர்ககா முன்னேற்றத் திட்டம் ஒரு பரிட்சார்த்த முறை அல்ல, காந்திய தத்துவத்தின்படி கிராம வாழ்க்கையைச் செப்பனிட, சர்க்கார் மேற்கொண்டுள்ள கோட்பாடுகளில், இந்த பிர்க்கா திட்டமும் ஒன்றாகும்."

—மந்திரி—

தனக்குத் தேவையான ஆடைக்கு வேண்டிய நூலை, தானே நூற்றுக்கொள்ள வேண்டும்; நெசவும தானே நெய்தாகவேண்டும்; தான்யங்களை உற்பத்திச செய்து கொள்ளவேண்டும்; கிணறு தோணடிக்கொள்ள வேணடும்; உழவேண்டும்; விதை விதைக்க வேண்டும்; களை பிடுங்கவேணடும்; அறுவடை செய்ய வேண்டும்; தாள்

# இசை இனிக்கிறது இயல் கசக்கிறது!

## உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார் கல்வி அமைச்சர்!

"தமிழின் பண்பாடு தமிழ்ப் பாட்டுகளிலேயே இருக்கிறது, மேடையிலிருந்து தமிழ்ப் பாட்டு பாடுசாகயில் பரவசமும் அமைதியும ஏற்படுசிறது. பாடல்கள் எந்த மொழியில் இருந்தாலும் அவற்றைத் தமிழில் கற்றுப் பாடவேண்டும."

இங்ஙனம் தமிழிசையின் சிறப்பை உணர்ந்து பரவசமடைந்து பேசியிருக்கும் தமிழ் அன்பர் யார் தெரியுமா? ராஜ்ய சென்னை கல்வி அமைச்சர் மாதவ மேனனர் இருக்கிறாரே அவர்தான் இங்ஙனம் இசை இன்பத்தில் மூழ்கி, சன்மையும் மறந்து பேசியிருக்கிறார். இதனைச் சுருங்கச் சொல்ல வேண்டுமானால், அமைச்சர் தமிழின் உயர்வையும் சிறப்பையும் உணருகிறார் என்றே சொல்ல வேண்டும். அமைச்சர் தமிழிசையிடம இவ்வளவு ஆர்வம் கொள்வது பற்றி மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் கல்வி அமைச்சர் என்ற முறையிலே இத்தகைய இனிய தமிழ் மொழிக்கு அவர் காட்டும் ஆதரவு என்ன என்பதுதான் நமது கேள்வி. தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தேடாவிட்டாலும் அதன் அழிவுக்கு வழிகோலுவவண்ணம் இந்தி மொழிக்கு ஆதரவு தருவதும், தனித் தமிழை இழித்துப் பேசுவதும் ஆன காரியங்களில் அமைச்சர் ஈடுபடுகிறாரே இது ஏன்? இசைத் தமிழ் இனிப்பாயிருக்க, இயற் தமிழ் மட்டும் கசப்பாயிருப்பது ஏன்? பாடல்களைத் தமிழிலேயே பாடவேண்டும் என்று வற்புறுத்திக் கூறும் கல்வி அமைச்சர், இந்தி ஏகாதிபத்தியம் இனிய தமிழை அழிக்க முயல்வதை ஏன் தடுக்க முன்வரக்கூடாது? தடுக்க முன்வராவிட்டாலும் தடுக்க முன்வருவோரைத் தாக்கிப் பேசாமலாவது இருக்கக் கூடாதா? தமிழின் இனிமையை உணரும் அமைச்சர் தமிழுக்கு ஊறு செய்யப் புறப்பட்டிருக்கும் சக்திகளின் கொடுமையை உணராமற்போனது ஏன்? அல்லது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறாரா?

## இந்தியாவில் குழந்தைகள்

உலகின் வேறு எப்பகுதியினையும்விட இந்தியாவில்தான பிறப்பு விகிதம் அதிகரித்துக் காணப்பட்டு வருகிறது. எனவேதான பிரசவ பாராமரிப்பு பற்றியும் குழந்தைகள் உடல் நலம் கண்காணிப்பு பற்றியும் பயின்று பரிசீலனை செய்ய உலக சுகாதார ஸ்தாபனம் இந்தியாவைத் தேர்ந்தெடுத்துள்ளதென்று அந்த ஸ்தாபனத்தின் உறுப்பினருள் ஒருவரான டாக்டர் ஏ. எஸ் பிலிருவோனென் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக, சராசரி இந்தியக் குழந்தை போஷாக்குறைவாலேயே அவதியுறுகின்றதென்றும், பசும் பால் இல்லாத பட்சத்தில் எருமைப் பாலையே பயன்படுத்தலாமென்றும், இந்தியாவில் குழந்தைகள் பல மருத்துவ விடுதிகள் சிலதான் இருக்கின்றனவென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அடித்து மணிகளை உருவாக்க வேண்டும்; பனை ஏறவேண்டும்; பதனி தயாரிக்க வேண்டும்; பனைவெல்லம காய்ச்ச வேண்டும; பஸ் ஏறாமல் பாதையிலே நடக்கவேண்டும், வீடு கட்டிக் கொள்ளவேண்டும; விளக்கெண்ணெய் விளக்கு ஏற்றிக்கொள்ள வேண்டும்; வரண்ட மூளையோடு வறுமையிலே வாழ வேணடும!

காந்தியப் பொருதார திட்டத்தில கிராமத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள செல்வச் சீரமைப்பு சித்தாந்தம் இதுதான்! கிராம மக்களை உருப்படாமல் அடக்கி, இவைகளில் சிலவற்றைச் சீர்குலைத்து, ஒன்றிரண்டுக்கு உயிரளித்து, பிர்ககா முன்னேற்ற திட்டமெனப் பெயர் கொடுத்து பரிட்சார்த்தமாகப் புகுத்தி இருக்கிறோம என்று துவக்கத்தில் பசப்பி, பொது மக்கள்

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

## நியூயார்க் நிருபர் டைரிக்கு!

### நேரு குறிப்பிட மறந்தவை

இந்தியாவில் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டிருப்போர் வகுப்பு வெறியர்கள்தாமென்றும், கம்யூனிஸ்டுகள் அப்படி வைக்கப்படவில்லையென்றும் பிரதமர் பண்டித நேரு அண்மையில் நியூயார்க்கில் நிருபர்களிடைத் தெரிவித்தார்.

நேரு கூறியது உண்மைக்கு எவ்வளவு மாறுபட்டதென்பதைக் காட்ட, செப்டம்பர் 28ந் தேதியிட்ட புது டெல்லி செய்தி யொன்றினை (இந்தியப் பத்திரிகைகளைத் திலுமே வெளிவந்தது) மீண்டும் கீழே தருகிறோம்.

"சமஸ்தானங்கள் நீங்கலாக இந்தியா முழுதும் (1949) ஆகஸ்ட் 15-ந்தேதி யன்று காவலில் வைக்கப்பெற்றிருக்கும் கம்யூனிஸ்டு கைதிகளின் மொத்த எண்ணிக்கை 2,500 ஆகும். தண்டனை பெற்ற கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை ஜூன் 30-ந்தேதி வரை 119 ஆகுமென்று இந்திய சர்க்காரின் உள்நாட்டு விவகார இலாகாவிலிருந்து தகவல் கிடைக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதமாக்கப்பட்டிருக்கும் ஐதராபாத்திலும் பெருவாரியான கம்யூனிஸ்டுகள் காவற்கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

மாகாணந்தோறும் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்ட் கைதிகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:- சென்னை: 640; பம்பாய் 350; மேற்கு வங்கம்: 500; ஐக்கிய மாகாணம்: 230, கிழக்குப் பஞ்சாப்; 250; பீகார்: 100; மத்தியமாகாணம், பீரார் 100; அஸ்ஸாம்; 89; டெல்லி: 5. ஆஜ்மீர், மெர்வாரா, குடகு இல்லை.

—யு. பி. ஐ.

மாலை மணி

சென்னை 10—11—49 வியாழக்கிழமை

# அடியைக் குறைக்கலாம்-அறிவைப் பெருக்கலாம்

மனித சமுதாயத்தின் நேரமும். நினைப்பும் நாளுக்கு நாள் அருமையுடையனவாகவும், மிக்க விலை மதிப்பு வாய்ந்தனவாகவும்; வளர்ச்சி பெற்று வருகின்றன.

உள்ளத்தைப் பொறுத்தும், உடலைப் பொறுத்தும் ஏற்படுகின்ற வாழ்வின் விழைவுகளை அன்ருடம் நிறைவேற்றிக்கொள்வதில் மனிதன் முனைந்து நிற்கிருன். காட்டுமிராண்டிக் காலத்திலிருந்ததைவிட, மனிதனின் விழைவுகள், இப்பொழுது, பலப்பலவாக பல்வேறு விதமாக வளர்ந்துவிட்டன. ஆகவேதான், அந்த விழைவுகளை நிறைவேற்றிக்கொள்ள, குறுகிய காலத்திற்குள், விரும்பிய பயனை நுகர்ந்துவிட மனிதன் துடிதுடிக்கிருன். குறுகிய நேரத்திற்குள், நிறைந்த நினைப்பை, அதாவது கருத்தைப், பெற்றுக்கொள்ள விரும்பும் அவன், சுருங்கச் சொல்ல வைத்து விளங்கிக்கொள்ள விரும்புகிருன்.

நேரத்தைப்பற்றிய அக்கரையும், நினைப்பைப்பற்றியபொறுப்பும் நாகரிக நாடுகளில் மிக முக்கியமாகக் கவனத்திற்கொண்டு வரப்படுகின்றன. அதன் விளைவாகப் பொழுது போக்கும் முறைகளில், பல மாறுதல்கள் கையாளப்படுகின்றன. அந்த முறையிலே ஒன்ருகத்தான், பட நீளக்கட்டுப்பாடு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது, இந்திய அரசாங்கத்தால் என்று கருதுகிறேம்.

பேசும் படத்தின் நீளம், பொதுப்படையாக உலகியலை நோக்கும் போது, ஒரு குறிப்பிட்ட அளவு இருந்தால் போதுமானது; மிதமிஞ்சி இருப்பது தேவையில்லாதது — நேரத்தையும் பொறுமையையும் கொலை செய்வது என்று கருதிப்போலும், இந்திய சர்க்கார், படங்களின் நீளம் 11500 அடிகள் இருந்தால் போதும் என்று வரையறுத்திருக்கிருர்கள். இந்தவரையறை கூடாது. படத்தின் நீளம் படம் எடுப்பவரின் விருப்பத்திற்கே விட்டுவிட வேண்டும், என்று பல செய்தித்தாளினரும் வாதிட்டு நிற்கின்றனர். தென்னிந்திய படமுதலாளி ஒருவர் அப்படி விரும்புகிருர். அவர் கருத்தோடு இணைந்து நிற்கக் கடமைப்பட்டவர்களாகக் கருதிக்கொண்டிருக்கின்ற செய்தித்தாளினர், அவர் கருத்துக்கு ஆதரவுதேடவிரும்புகின்றனர். அவ்வளவுதான்!

உண்மையிலேயே 11500 அடிகள் நீளமுள்ள படம் போதாதா என்ருல், போதும். உலகிலுள்ள மற்ற மக்களுக்குப்போதும்போதுதென்னட்டவர்க்கு மட்டும் எப்படிப் போதாமற் போகும்!

புராணங்கள் எழுதிய காலம் போய், சிறுகதை எழுதும் காலம் பிறந்துவிட்டது; காவியங்கள் வரைந்தது போய். சிறுகவிதைகள்வளரத் தொடங்கிவிட்டன; ஹரிகதா காலட்சேபங்களுக்கு நீண்ட நேரம் செலவழிப்பதுபோய், பொதுக் கூட்டங்களில் குறைந்த நேர சொற்பொழிவுகள் நிகழ்த்தும் தன்மை ஏற்பட்டு விட்டது; நீண்ட நேர இசையரங்குகள் கேட்பது போய், குறுகிய கால வானெலி இசையரங்கு கேட்கும் முறை வளர்ந்துவிட்டது. முப்பது பாட்டுகள் பாடிக்காண்பித்த பேசும்படங்கள், நான்கு அல்லது ஐந்து பாட்டோடு நிறுத்திக் கால அளவைக் குறைத்துக்கொள்ளும் பண்பு தோன்றிவிட்டது. 23000, 24000, அடிகளுக்குப்படங்கள் எடுத்தது போய் 15000, 16000 அடிகளுக்குக் குறுக்கிவிட்டார்கள். இவ்வளவும் நடைபெற சம்மதித்த மக்கள் 11500 அடிகளுக்குப் படம் பிடித்தால் ஏற்க மாட்டார்களா? எப்படி ஏற்காமல் போவார்கள்?

குறைந்த அளவில், இந்திப்படம் எடுக்க வட இந்தியர்களுக்கு முடிகிறது என்றும், தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு படங்களை எடுக்க குறைந்த அளவு போதவில்லை என்றும் கூறி, தென்னிந்திய கிராம மக்கள் குறைந்த அளவுப் படத்தைப் பார்க்க விரும்புவதில்லை, அப்படி அவர்கள் விரும்பாமல் போய்விட்டால் தமிழ்த் தெலுங்குப்படஉலகம் நசித்து விடும் என்றும் விசித்திரக் காரணங்கள் கூறப்படுகின்றன.

வடஇந்தியாவிலுள்ள கிராம மக்கள்மட்டும் எப்படி 11500 அடி இந்திப்படங்களைக்காண சகித்துக் கொள்கிருர்கள்? அந்தப் பாமரமக்கள் சகித்துக் கொள்ளும்போது, தென்னந்திய கிராமப் பாமரமக்கள் எப்படிச் சகியாதவர்களாக ஆகிவிடுவார்கள்?

இந்திப்படங்கள் பெரு நகரங்களுக்குச் செல்கிறதாம், ஆகவே அதனுல்பெரும்லாபம் அவைகளுக்குக் கிடைக்கிறதாம், அவ்வளவு லாபம்தமிழ்ப் படங்களுக்குக் கிடைப்பதில்லையாம், தமிழ்ப்படங்கள் கிராமங்களையே நம்பி வாழ்கின்றனவாம், எனவே படநீளத்தைக் குறைக்கக் கூடாதாம்!

ஆங்கிலப் படங்களுக்கு உலகில் ஏற்படுகிற அளவு லாபம் இந்திப்படங்களுக்கு ஏற்படுவதில்லை! அதுபோல இந்திப் படங்களுக்கு ஏற்படுகிற லாபம்தமிழ்ப்படங்களுக்கு ஏற்படுவதில்லை! பரந்த பரப்புக்குத் தகுந்தாற்போல் லாபம் கிடைக்கிறது! ஆகவே லாபம் பரப்பைப் பொருத்தது தானேயொழிய, படத்தின் அடிநீளத்தைப் பொறுத்ததல்ல! படத்தின் தன்மையைப் பொறுத்து தான் மக்கள் படம் பார்க்க விரும்புகிருர்களே யொழிய, அடி நீளத்தைக்கண்டு அல்ல!

உண்மை இவ்வாறு இருக்கும் போது, தமிழ்ப் பட முதலாளிகள் அதிக நீளம் கேட்பதற்குக் காரணம், 'புராண காலத்திலேயே' நீண்ட நாள் வாழ எண்ணுவதேயாகும். ஆங்கிலப் பட முதலாளிகளும், இந்திப் பட முதலாளிகளும் சமூக, சரித்திரப் படங்களை எடுக்கிருர்கள்; அதற்கு 11500 அடிகள்போதுமானதாகின்றன; மக்களுக்கும் பிடிக்கிறது; லாபமும் தருகின்றன. தமிழ்ப் பட முதலாளிகளும் சமூக, சரித்திரப் படங்களை மட்டும் எடுப்பதனுல் 11500 அடிகள் போதும்; உறுதியாகப் போதும்! மனித வாழ்க்கைக்குத் தேவையற்ற, வேண்டப்படாத புராணப் படங்களுக்கு 17000 அடிகள் தேவைபபடுகின்றன. ஆகவேதான் தமிழ் நாட்டில் வதியும் வைதிகப பட முதலாளிகளும், வைதிகப் பத்திரிகையாளர்களும், இன்னமும் புராண உலகிலேயே மக்களை இருத்திவைக்க ஆசைப்படுகிருர்கள்-அதற்குத் தகுந்தாற்போல் பட நீளததைக் கேட்கிருர்கள்.

இந்திப் பட முதலாளிகள் சமூகப் படங்கள் எடுக்கத்தொடங்கினர்; வெற்றியும் பெற்ருர்கள்; குறைந்த அளவு போதுமானதாயிற்று. அதுபோல தமிழ்ப் பட முதலாளிகளும் சமூகப் படங்கள் எடுக்க முயன்ருல், குறைந்த அளவு நீளம் போதும்; ஏற்படும் செலவும் குறையும்; வெற்றியும் பெறுவார்கள்.

எந்தப் படமானுலும் 11500 அடிகள் அளவுதான் பார்க்க முடியும்என்றுஏற்பட்டுவிடுமானுல், படம் பார்ப்பதிலே ஆவல் கொண்டுள்ள மக்கள் அதைப் பார்க்காமல் எங்குபோய்விடுவார்கள்! அவர்களுக்கு முக்கியம் அடியின் அளவு அல்ல, படத்தின் தரம். அந்தத் தரத்தை 11500 அடிகளில் நன்கு சித்தரிக்க முடியும், மனமிருந்தால்!

இந்த அளவு நீளமுள்ள படத்தோடுகூட, சுமார் 3000 அடிகளுக்கு மேற்போகாத செய்திப படங்களையும், கல்வி புகட்டும் படங்களையும், விஞ்ஞானத்தை விளக்கும் படங்களையும் காட்டலாம், மக்களுக்கு அலுப்புத் தோன்றுமலும் இருக்கும்; அதன மூலம் அறிவு கிடைப்பதாகவும் இருக்கும்; பொழுதுபோக்குவதாகவும் இருக்கும.

17000 அடி வரையில் புராணப் படங்களை நீட்டி, தலைவலியையும், அறியாமையையும் புகுத்துவதை விட, 11500 அடி அளவாகக் குறைத்து, அறிவையும், தெளிவையும், வாழ்க்கையையும் விளக்கும் படங்களை எடுக்கத் தமிழ்ப் பட முதலாளிகள் முனைவார்களேயானுல், நாட்டிறகும் நல்லது, மககளுக்கும் நல்லது. படம் எடுப்போர்க்குச் செலவும் குறையும், அதன காரணமாக மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் படத்தைக காட்டவும் செய்யலாம்!

ஆகவே பட நீளத்தின் அடியைக் குறைத்து, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறைப்படி அறிவைப் பெருக்கலாம். அடியைக் குறைத்து, அதன் மூலம் புராண ஆபாசதத்தையும் குறைத்துஅறிவைப்பெருக்கத்தமிழ்ப் படம் எடுப்போர் பாடுபடுவாராக! படநீளத்தின் அடியைக் குறைத்துக் கொள்வதால் ஆபத்து ஒன்றுமில்லை!

# மத பக்தியின் விளைவு!

## மாமனை உயிர்ப்பிக்க மகனைப் பலி கொடுத்த பக்தன்!

### கனவில் கடவுள் வந்து சொன்னபடி நிறைவேற்றினுன்

கோவை ஜில்லா களுவைராயிரமத்தில் கன்னிமுத்துக் கவுண்டன் தன் குழந்தையைக் கொன்றதாக மரண தண்டனை விதிக்கப் பட்டான். ஆனுல், கன்னிமுத்து தன் குழந்தையைக் கொலை செய்ததற்குக் கூறியுள்ள காரணங்கள் மக்கள் சமுதாயத்தில் கண், விழிப்புக்குரியவை.

கன்னிமுத்துவின் கனவில் சிவபிரான் தோன்றினர். மகனைப் பலியிடுமாறு கூறினர். சிறிது காலத்திற்கு முன் செத்துப்போன கன்னிமுத்துவின மாமன் உயிரோடு வரவேண்டுமானுல், இளைய குழந்தை பலி தரப்பட வேண்டுமென்று சிவபிரான் கனவில் கூறினர்.

கன்னிமுத்துவுக்கு அவன் மாமன் குரு. குருவின் ஆவியே தன் இளைய மகனுகப் பிறந்திருப்பதாகவும் அக குழந்தையைப் பலியிட்டுவிட்டால, உயிரோடு மாமன் திரும்பிவந்து விடுவானென்றும் கனவில் சிவபிரான் கூறினர்.

சிவபிரானைத் திருப்தி செய்விக்கும் பொருட்டு, தன்னுடைய மகனை, தன்னுடைய குடும்பத்தார் அனைவரையும வரிசையாக நிற்கவைத்து, அவர்கள் எதிரில் அரிவாளால் ஒரே வெட்டில இரு துண்டாக விழுமாறு வெட்டினுன் கன்னிமுத்து.

கன்னிமுத்து சித்தப்பிரமையுடையவனல்லன்; பித்தம் பிடித்தவனல்லன்; நல்ல சுயவுணர்வுடையவன். நாள் தவருமல் பூசை புனஸ்காரங்களை நியமம் குன்றுமல் செய்துவந்தவன். மத பக்தியும் கடவுள பற்றும் மிகுதியாகக் கொண்டவன்; சமய ஆசார சீலன்; சமய நெறி சிறிதும் வழுவாதவன். ஆகவே, புத்தி மாருட்டத்தால இவ்வாறு செய்தான் எனக் கூறுவது தவறு. இவ்வழக்கை விசாரித்த நீதிபதியும் இவனுக்குப் புத்தி மாருட்டமில்லை என்றனர். இவனைச் சிறிதுகாலம் ஆஸ்பத்திரியில் வைத்துக் கவனித்த வைத்தியர்களும் இவனுக்கு புத்தி மாருட்டமில்லை யென்றும் தெளிந்த அறிவுடையவன் என்றும் கூறிவிட்டனர்.

ஆனுல், புத்தி மாருட்டமில்லாத, மத பக்தி மிகுந்த கடவுளன்பருள்ள கன்னிமுத்து இவ்வாறு செய்யக் காரணம் என்ன? இருக்கிறது காரணம். சமயப் பற்றும் கடவுள் பக்தியும் அவனுக்கு முற்றியது. சமயம் போதிக்கும் நூல்களிலே, குழந்தையை வெட்டிக் கறியாக்கிக் கடவுளுக்கு விருந்து படைத்த சிறுத்தொண்டர், அடியவர்களில் சிறந்தவராக மதிக்கப்படுகிருர். சிறுத்தொண்டருக்கெனப் புராணமே பாடப்பட்டிருக்கிறது. சிறுத்தொண்டர் கதை சத்கதா காலட்சேபமாக நடைபெறுகிறது. சிறுத்தொண்டர் நாயன்மார்களுள் ஒருவராக விளங்குகிருர். அப்படித்தான் மகனை வெட்டிப் பலியளித்த ஒருவர், மக்களிடையே பெரும்புகழுக்குரியவராகிச் சிறப்படைந்திருக்கும்போது, சமயப் பற்றுள்ள கன்னிமுத்துக்கள் பலர் அதே போன்ற "பெருமைக்குரிய" நிலைமையை அடைய, முன்னரே புராண வயிலாக முன்மாதிரியாகச் செய்துகாட்டப்பட்டுள்ள குழந்தைப் பலியைக் கையாளுவதில் வியக்கத்தக்க சேதி இல்லை அல்லவா?

எனவே, நாட்டிலே மதத்தின் பேராலும், கடவுள் பேராலும் புராண சாஸ்திரங்கள் வாயிலாக மக்களிடைப் பரப்பப்பட்டுள்ள மூடத்தனங்களை அடியோடு அகற்ற வேலை செய்தாலொழிய, ஒன்றிரண்டு கன்னிமுத்துக்களுக்கு மரண தண்டனை விதிப்பதால் மட்டும், இந்த அறியாமைக் கொடுமையை நாட்டை விட்டு அகற்றிவிட முடியாது, என்பதை நாட்டுத் தலைவர்கள் சிந்தையிலிறுத்த வேண்டும்.

## தென்னுப்பிரிக்காவில் உரிமைப்போர்

தென்னுப்பிரிக்காவில் மக்கள் உரிமைப்போர் தொடங்கி விட்டனர். பிரிட்டிஷ் பாதுகாப்பின் கீழுள்ள பெசுவானுலந்து, பாஸுடோலாந்து, ஸ்வாஸிலாந்து ஆகிய பகுதிகளைத் தென்னுப்பிரிக்க ஐக்ய அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுமாறு தென்னுப்பிரிக்கப் பிரதமர் தோழர் மாலன் சொல்லுவதை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். இதன் விளைவாகப் பெருத்த அளவில் வெள்ளையரை வெளியேற்றும் முயற்சி ஆரம்பமாகியிருக்கிறதாம். தென்னுப்பிரிக்க பிரிட்டிஷ் பிரதேசங்கள்மீது தோழர் மாலன் ஆதிக்கம் செலுத்த விரும்புவதைப் பிரிட்டிஷ் அரசியலார் கண்டித்து, மாலனின் கோரிக்கையையும் நிராகரித்து விட்டனர். தோழர் மாலனின் மமதை நீடித்துமானுல், தென்னுப்பிரிக்காவில வசிக்கும் 25 லட்சம் வெள்ளையர் விரட்டப்படும் அளவுக்குத் தென்னுப்பிரிக்க மக்களின் கிளர்ச்சி வலுக்கும் எனத் தெரிகறது.

# காமராஜர் கருத்தைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தைப் பாழாக்கிவரும் திட்டத்தைக் குறித்து இரண்டு நாளைக்கு முன் சென்னை சட்ட சபையில் சொற்போர் நிகழ்ந்துள்ளது. அதில் முக்கியமான சிலவற்றையே மேலே கொடுத்திருக்கிறோம்.

எந்த நல்ல காரியத்திற்கும் "பணமில்லை! மேலும் வரி கொடுங்கள்! ஜாலவித்தை செய்கிறோம் காணுங்கள்! கண்டு மகிழுங்கள்!' என்று மூச்சுவிடாமல் பேசிவரும் மந்திரிகளுக்கு, என்றென்றும் உருப்படாத தங்கள் கோணலை கோபாடுகளை, மக்களிடம் உலவவிட்டுச் சாரங்காட்டம் போடுவதற்கு மட்டும் போதிய அளவு பண பலம் இருக்கிறதுபோலும்! பிர்க்கா முன்னேற்றத்தைக் கண்டு பல அறிஞர்கள் பல சந்தர்ப்பங்களில், நயமாகவும்—காரசாரமாகவும் கண்டித்துக் கூறியுள்ளார்கள். நேர்மதியாளரிடம் கூறவேண்டிய பொருளுரையை, புரிந்துகொள்ளமுடியாத மந்திரிகளிடம் புள்ளி விவரங்களோடு பேசிவிடுவதால், மட்டும் நன்மையா ஏற்பட்டு விடப்போகிறது? மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்ற கருத்துக்கும் கலங்கரை விளக்கமாக இருந்துவரும் காங்கிரஸ் அமைச்சர்களா, சொந்த வழியை விட்டு. பிறர் வழியில் பின் தொடர்வார்கள்?

மாற்றுக் கோட்பாடினர் கூறியதைத் தட்டி நடந்துகொள்வதில்தான் நல்ல புகழ் பெற்றுவிடுகிறார்கள் நமது அமைச்சர்கள் என்று மட்டும் எண்ணிவிட வேண்டாம் எவரும் சொந்தக் கட்சியினர், இவர்கள் போக்கிலே குறை கண்டு கூறினாலும் அதற்கும், கழிவுக்கூடையை ஏற்ற இடமாக்கப்படுகிறது இந்த மதிமிக்க மந்திரிகளால்! சாதாரண காங்கிரஸ்காரர்கள் கூறினதாக இருந்தால்கூட. இவர்கள் தட்டி நடந்துகொள்வதில நல்லறிவு கலந்து இருப்பதாக நாம் தீர்மானித்துக் கொண்டு திருப்தி பெறலாம்.

சென்னை அமைச்சர் குழுவை படைத்தல்—காத்தல்— அழித்தல் என்னும் மூன்று இடத்திலும் இடம் பெற்றவராக உள்ள தமிழ்நாட்டுக்காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் காமராஜரின் கட்டளையைக்கூட, நமது கனங்கள், கேலிசெய்து பார்க்கும் நிலையில் இருந்துவருகிறார்கள் பிர்க்கா திட்டத்தில் பொது மக்கள் பணம் பாழாகிறது என்று ஏற்கனவே சில நாளைக்கு முன்பு கூறிவந்துள்ளார் காமராஜர். அதனை எடுத்துக்காட்டாகச் சுட்டிக் காட்டி, காங்கிரஸ் உறுப்பினரான டி. எம். கோசல்ராம், கனம் பரமேஸ்வரன் அவர்களை மடக்கியிருக்கிறார். இந்த ஒன்றுக்குமட்டும் மகாஜனம் முறை மந்திரிக்கு நினைவிற்கு வருகிறது. காமராஜர் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் தானே! அவரை நீங்கிய நாடு இருக்கிறது—நல்ல மக்கள் இருக்கிறார்கள்— அவர்கள் கோரிக்கைகளுக்கு நாங்கள் இணங்க வேண்டி இருக்கிறது—சட்டசபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்— அவர்கள் வேண்டுகோளுக்கும் மதிப்பளிக்க வேண்டிய கடமை இருக்கிறது" என்று. நாம் விளக்க உரைதரவேண்டிய மாதிரியினால். மக்களாட்சி முறையை கேடயமாகக் கொண்டு, கிராம மக்களுக்கு 'வாழ்வு' தர, வரிந்து கட்டிக்கொண்டு முன் வருகிறார் மந்திரி பரமேஸ்வரனார்! ஜன நாயகப்போர் தொடுக்கிறார். தமிழ் நாட்டு! ராஷ்டிரபதி' காமராஜர் மீது கனம்.

எந்த எந்த கிராமத்து மக்கள், பிர்க்கா திட்டத்தை விரிவாக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார் என்று விவரம் கேட்கவில்லை, சட்டசபை உறுப்பினர்கள். மந்திரியாரை! அதனை விரிவாக்க மனுகொடுத்துக் கொண்ட மேதாவி சட்டசபை உறுப்பினர்களின் திருநாமங்களையாவது குறிப்பிடுங்கள் என்றுகூட கேட்க மறந்து விட்டிருக்கிறார்கள் சட்டசபை உறுப்பினர்கள்! காரணம்—சபா நாயகரின் சர்வாதிகாரம் பாய்ந்துவருமோ என்ற அச்சமாக இருக்கக்கூடும்!

ஒரு திட்டத்தை அமுல் நடத்தும்போது. அதனால் ஏற்படும் விளைவின் பலாபலனை, முன்கூட்டியே யூகிக்காமல், காரியமாற்றத் தெரிந்தவர்கள் எவரும், எந்தத் தொழிலிலும் தலையிடமாட்டார்கள் தப்பித்தவறி மேற்கொண்டாலும் எதிர்பார்த்தபடி நல்ல பலன் கிடைக்கவில்லையானால், போனவரையில் போய் தொலையட்டும் என்று, மேலும் கைப்பொருள் நஷ்டமாகாது, அத்தொழிலைக் கைவிட்டுவிடுவார்கள். நிபுணர்கள் மட்டுமல்ல, வெகு சாதரண மக்கள்கூட இப்படித்தான் நடந்துகொள்வார்கள்

பொதுப் பணத்தைச் செலவிடுகிற இடத்தில் உள்ள ஆளவந்தார்களுக்கு பொறுப்பு அதிகமாக இருக்கிறது. பிர்க்கா முன்னேற்றத் திற்கென்று. இதுவரையில் செலவிட்டப் பணத்திற்குக் கிடைத்த பலன், பொதுமக்கள் வரி பணம் பாழானது தான். இதனை மந்திரியே ஒத்துக்கொள்ளுகிறார். 'வெளிப்படையாகப் பலன் தெரியவில்லையானாலும்' என்று இழுத்து இழுத்துப் பேசுகிறார் பிர்க்காதிட்டத்தால், அத்திட்டத்தை அமுல் நடத்தப்பட்ட எந்த ஒரு கிராமமும். எந்தத் துறையிலும் முன்னேறிவிட்டதாகச் சொல்வதிற்கில்லை. அதற்கானவிவரம் கையில் இல்லாத காரணத்தால்தான், 'நாங்கள் செய்யும் ஜாலவித்தை எவர்களுக்கும் தெரியாது' என்று சாமர்த்தியம் செய்து பார்க்கிறார் கனம். தெளிவும் இல்லை- திறமையும் காணோம்—திருந்தும் தன்மையும் காணோம்!

இதுவரையில் கிராமங்களின் வளர்ச்சியை கவனித்துக்கொண்ட, பற்பல இலாகாக்களின் உத்தியோகஸ்தர்கள் இப்பொழுதும் இருக்கத் தான் இருக்கிறார்கள். அவர்கள் இதுவரையில் செய்து வந்தபணியைத்தான், இந்த பிர்க்கா திட்டத்தின் திருத்தூதர்களும செய்துவருகிறார்கள். 'அவர்தான் அதைச் செய்யட்டுமே நாம் ஏன் அதைச் செய்யவேண்டும்?' என்று ஒரு உத்தியோகஸ்தரோடு மற்றொரு உத்தியோகஸ்தர் போட்டியிட்டுக் கொண்டு, திட்டம் தேய்ந்து போய் முடிவில் பணம் பாழாவதுதான் விளைவாக இருக்கும்

காந்தியாரின் கிராமச் சீரமைப்பு முறைகளிலே இது முக்கியமானதாம்! எனவேதான், எவர் எப்படிப் பேசிக்கொண்டாலும், எடுத்த காரியத்தை;—பணத்தைக் காயாக்கும் பணியை—கைவிடமாட்டார்களாம் காங்கிரஸ் கனங்கள்! பொது மக்களைக் கசக்கிப்பிழிந்து வரியாக வாங்கும் பணத்தை, பிர்க்கா திட்டத்தின் பெயரால் பாழ் செய்யப்படுவதை, வரி கொடுப்பவர்கள் வெறுக்கத்தான் செய்வர். காந்தியார் கண்டது விண்டது என்பதற்காக, வீண் விரயத்தை வாழ்த்தி வரவேற்கமாட்டார்கள்!

காந்தியாரின் கோட்பாடுகளில், இந்தக் கனங்களுக்கு உண்மையிலேயே மனப்பூர்த்தியானநம்பிக்கை இருக்குமானால், நாளையே பதவியை விட்டு விலகிவிட்டு, ஆடைகளைக் களைந்து முழங்கால் வரையில் முண்டு கட்டிக் கொண்டு ஆள் அரவம் கேட்காத இடத்தில் ஆஸ்ரமம் அமைத்துக்கொண்டு நூற்பு யக்ஞம் செய்துகொண்டு, 'ஆத்ம பரிசுத்தத்திற்கு' அரிகதா காலட்சேபம் செய்து கொண்டு, பிர்க்கா திட்டம் மட்டுமல்ல, மனிதன் மூக்கால் மூச்சுவிடுவதை நிறுத்திக் காதால் மூச்சு விடுவதற்கான மார்க்கத்தைகூட கண்டு பிடிப்பதில் காலதேசம் செலவழிக்கட்டும்! கைப் பொருளைக் கொட்டி அழட்டும்! நாம் வேண்டாமென்று சொல்லவில்லை நமது வரிப் பணம், இந்த ஆளவந்தார்களின் கோணல் சேஷ்டைக்குப் பலியிடப்படுகிறது என்றால், நாம் கேட்கப்படவில்லையானாலும், கேட்காமல் எப்படி இருப்பது?

# அரை வயிற்றுச் சோறுதான்

---

## அதிகம் தரமுடியாது

இப்போது பங்கீட்டு முறையில் அளிக்கப்படும் 8 அவுன்ஸ் அரிசி பொதுமக்களுக்கு அரைவயிற்றுக்குத் தான் காணுகிறது. எனவே, இதைக்குறைந்த பட்சம் 16 அவுன்ஸாக ஆக்க வேண்டுமென்று பொது மக்கள் ஆங்காங்கே வேண்டியும், அமைச்சர்களை சேரிக்கிறனும் வாய்ப்புடையவர்கள் நேரில் எடுத்துச் சொல்லியுமிருக்கின்றார்கள்

ஆனால், சென்னைச்சட்ட சபையில் 12 அவுன்ஸாகவாவது உயர்த்தித்தருமாறு ஓர் அங்கத்தினர் கேட்டபோது, "அரிசிப் பங்கீட்டு அளவை 8 அவுன்ஸிலிருந்து 12 அவுன்சுக்கு உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை" என்று உணவு இலாக்கா அமைச்சர் அறிவித்துவிட்டார். எனவே பொது மக்கள் தங்கள் அரைப்பட்டினியை உடனே அமைச்சர்கள் போக்கி விடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்ததில் மண் விழுந்தது. அரைப்பட்டினி என்றும் அரைப் பட்டினியாகத்தான் இருந்தாக வேண்டும். இந்த விதி ஏழை மக்களுக்குத் தான்.

# தமிழ் வீரன் அருணசலம்

சென்னையைச் சேர்ந்த புகழ் பெற்ற குத்துச்சண்டை வீரர் தோழர் எஸ். ஏ. அருணசலம் அவர்கள் கடந்த 6-ம் தேதி என்று டைக்கர் காட்டேரி என்னும் இலங்கையைச் சேர்ந்த நீக்ரோ குத்துச்சண்டைக்காரருடன் குத்துச் சண்டையிட்டதன் விளைவாக உயிர் துறந்தார்

தோழர் அருணசலம் சென்னையில் பிறந்து வளர்ந்தவர். இறந்தபோது அவருக்கு வயது 38. இவர் 1932-ம் ஆண்டில் நடைபெற்ற ஒய். எம். சி. ஏ. குத்துச்சண்டை பாட்டியில் பியன் பட்டம் பெற்றார். அது முதல் அவரது ஆற்றலும் புகழும் வளரலாயிற்று. நாளடைவில் பல பெரிய குத்துச்சண்டை வீரர்களோடு போரிட்டு வெற்றி பெற்றார்.

இவர் 1932-ம் ஆண்டு முதல் 1943- ஆண்டுவரை பி. அண்டு சி மில்லில் வேலை பார்த்து வந்தார். பின்னர் 1943-முதல் எம். எஸ். எம். ரயில்வேயில் வேலை பார்த்து படிப்படியாக முன்னேறி சிக்னலர் பதவிக்கு வந்தார். இவருக்குச் சென்ற ஆண்டில்தான் திருமணம் நடைபெற்றது. சென்ற சில மாதங்களுக்கு முன் இவர் ஒரு குழந்தைக்கு தந்தையுமானார் இவருக்கு இரு சகோதரர்கள் இருக்கின்றனர்.

தோழர் அருணசலம் தனக்கிருந்த குத்துச்சண்டை போடும் ஆற்றலை ஒரு கலையாகவே போற்றி வந்தார். இயற்கையில் நல்ல பண்புகளை உடையவர். தோழர் கா டேரியுடன் போரிட முன் வந்த இவர் வெற்றி அல்லது சாவு என்ற வீர உணர்ச்சியுடன் 6-ரவுண்டுகள் போரிட்டு உயிர் துறந்தது இவரது வீர உணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இப்படிப்பட்ட ஒரு வீரஇளைஞரின் மறைவு பெருந்தவாக தமிழ் நாட்டிற்கும், சிறப்பாக குத்துச் சண்டைக்கலையுலகிற்கும் பெருத்த நஷ்டமாகும்.

மறைந்த வீரர் தோழர் அருணசலம் அவர்களின் உறவினர் நண்பர் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

# சொல் ஒன்றும் செயல் வேறுமா?

---

நெல்லை மாவட்ட வணிகர் அவையில் அமைச்சர் பக்தவத்சலனாரும், அமைச்சர் ராக்கி காமராஜரும், வரவேற்றுப் பெற்றுப் பேசிய போது, வணிகர்கள் பொது மக்களின் நலனையே கவனிக்க வேண்டும் என்று வாய்க்கு வலியில்லாமல் பேசியுள்ளார். அமைச்சர் அதற்கு முத்தாய்ப்பு வைத்து, "ஆம் ஆம்; வர்த்தகர்கள் பொது மக்களைத் திருப்தி செய்யவேண்டும்" என்று கூறினர்.

இவ்விரண்டு பேர் பேசியிருப்பதும் மிகவும் சரிதான். பொது மக்களுக்கு அதிருப்தி ஏற்படும்' வகையில வர்த்தகர்கள் மட்டுமென்று. அரசாங்கமும் நடந்துகொள்ளக் கூடாது. பொது மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் வகையில் நடந்துகொண்டால், இன்றைக் கில்லாவிடினும் ஒரு நாள் அவர்கள் அறிவுக்கண் திறக்கப் பெற்றவுடன், தங்களை வஞ்சித்தவர்கள் எனினும் அரசாங்கத்தாரெனினும் அஞ்சமாட்டார்கள் விரட்ட என்பது அமைச்சர் குழாம் அறிய வேண்டிய விஷயம்.

நெல்லை சென்று வாணிகர்க்கு அறிவுறுத்திய அமைச்சரும் அமைச்சராக்கியும், இங்கே சென்னையும் அரசாங்கத்தார் நடத்தும் வியாபாரமாகிய பஸ் போக்குவரத்துத் துறையில், 7 பாதைகளில் மைலுக்கு 6½ பை என்ற அடிப்படையில் கட்டணத்தை உயர்த்திப் பொது மக்களிடமிருந்து பணம் வசூலிப்பதற்கு என்னவென்று கூறுவது!

போர்க்காலத்திலே, பெட்ரோல் கிடைக்காதிருந்த சமயத்திலே கரிபோட்டுப் பஸ்கள் நடந்திருந்தாலத்தில்கூட வசூலிக்காத அளவு கட்டணத்தைப் பொது மக்களிடமிருந்து சென்னை அரசாங்கம் வசூலிக்கத் துணிகிறதென்றால் இது பொதுமக்களுக்குத் திருப்தியுண்டாக்கும் செயல் என்பது மந்திரி குழாத்தினரின் கருத்தோ! அல்லது இந்த வர்க்கத்தில் நல்ல வருமானம் கிடைக்கட்டுமே என்ற பேராவா?

# ரிக்ஷாத் தொழில் அகலட்டும்!

---

## ரிக்ஷாக்காரர் வாழவேண்டாமா?

---

ரிக்ஷா இழுக்கும் தொழிலை ரத்து செய்யும் பிரச்சினைபற்றி 8-ம் தேதியன்று சென்னை சட்டசபையில் வெகுவாகப் பேசப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்திருக்கும் சட்ட மந்திரி தோழர் கே. மாதவ மேனன், கையால் இழுக்கும் ரிக்ஷாக்களை 1947-ம் ஆண்டு முதலே படிப்படியாகக் குறைத்து வருவதே சென்னை சர்க்காரின் திட்டமாக இருந்து வருகிறதென்றும், காரணம் ரிக்ஷாத் தொழில் இழுப்பவன் உடற்கட்டைப் பாதிப்பதோடு அது ஒரு 'கேவலமான' தொழிலாகக் கருதப்படவும் ஏதுவாகி விட்டதென்றும், இதனால்தான் கடந்த இரண்டாண்டுகளில் சென்னை நகரில் ரிக்ஷாக்களின் எண்ணிக்கை 6,000-லிருந்து 4,250 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

சர்க்காரின் இம்முயற்சியை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். உழைக்க உள்ளமும் சக்தியும் கொண்ட இப்பாட்டாளி மக்கள் இதுகாலம் வரை இது போன்ற 'ஆளையாளிழுக்கும் அருவருப்பான' தொழிலில் ஈடுபடுவர அனுமதிக்கப் பெற்று வந்தது உள்ளபடியே சமுதாய சாபக்கேடாகும். சர்க்கார் இப்போதாவது இதனையுணர்ந்து ஆவனசெய்யமுற்படுவது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், மதுவிலக்கு என்று கூறி ஆயிரக்கணக்கான 'கள்ளிறக்கும் தொழிலாளர்களை' நடுத்தெருவில் விட்டதுபோலத்தான இந்த ரிக்ஷாத் தொழிலாளரும் விடப்படுவரோ என்று தெரிகிறது. சர்க்காரின் இப்போக்கில் கியாயம்பெறுப்பு இருப்பதாகத் தோன்றவேயில்லை. படுகிடும் பசிப்பட்டினி, இப்பட்டினியாயிருந்து காலங்கழித்து வந்த இத்தொழிலாளரின் சாதனத்தைப் பிடுங்கிக் கொண்டு, அதனை சட்ட விரோதமாக்கிவிட்டு, அவர்களை வறிதே அலையவிடுவது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. சர்க்கார் தங்களது சொந்தப் பொறுப்பில் அவர்களுக்கு ஏதாவது வேலை கொடுத்தே ஆகவேண்டும். ரிக்ஷா இழுக்கும் தொழிலை ரத்து செய்யும் சர்க்காரின் நோக்கம் அப்போதுதான் முற்றிலும் நிறைவேறியதாகக் கருதப்படும்.

# அழகு எழுத்தில்-வன்மைப் பேச்சில் கருத்து, பழத்தில் வைக்கும் மருந்து!

## கொள்கைக்காகச் சுயநலத்தைத் துறப்பவனே இலட்சியவாதி

### "இலட்சியவாதி" நாடகத்தில் கருணாநிதி

பாப்பிரெட்டிப்பட்டி, நவ. 7-

பாப்பிரெட்டிப்பட்டியில் 6-11-49 இரவு 10-மணிக்குத் தோழர் மா. சிற்பி முதலியவர்கள் நடிக்கும் அழகிரி நாடக மன்றத்தினரால், தீபம் டாக்கீசில் 'இலட்சியவாதி' என்ற நாடகம் தோழர் குள்ளப்பன் அவர்கள் தலைமையிலும், தோழர் ஆர். சி. கோபால் அவர்கள் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது. பொம்மிடி, அரூர், வேங்கடசமுத்திரம் முதலிய பல ஊர்களிலுமிருந்தும் மக்கள் திரளாக வந்திருந்தனர். தோழர் விசுவநாதன் அவர்களின்பகுத்தறிவுப் பண்கள் நாடகத்தை மிகவும் சோபிக்கச் செய்தன. மு. கருணாநிதி

நாடக மன்றத்தின் திறப்பாளராக வந்திருந்த தோழர் மு. கருணாநிதிஅவர்கள்தனது நீண்ட சொற்பொழிவில்குறிப்பிட்டதாவது:—

"தோழர் சி. பி. சிற்றரசு அவர்களால் தீட்டப்பட்ட இந்த நாடகம், சுயமரியாதை இயக்கத்தின் கருத்துப் புதையல்களிலே ஒன்று! ஓர் காலத்தில் நாடகமேடை பழமைபற்றுக் கொண்டவர்களுக்கே உரிமையுடையதாயிருந்தது. அதன் மூலம் நாக்கு முரண்பட்ட கலாச்சாரம் பிரச்சாரம் செய்யப்பட்டது. பகுத்தறிவு புரியினரின் நல்ல திருப்பணிகளிலே, நாடக மேடையில் புரட்சி உண்டாக்கியதும் ஒன்று. பழமை என்ற எதிரிக்கு எத்துணை படைபலம் உண்டோ—எத்துணைவகை சேனையுண்டோ—அத்துணைவகை சேனைகளையும் நாமும் தயாரித்துத்தான் ஆக வேண்டும். இசையிலே-இயலிலே-நாடகத்திலே எல்லாத் துறைகளிலும்நமதுகொள்கை நுழைக்கப்பட வேண்டும் அதற்குப் பாரதிதாசன்-அண்ணாத்துரை பரம்பரையினர் ஏராளமாக உண்டு!

மக்கள் நம்முடைய கொள்கைகளைப் புரிந்து கொள்ள எழுதிவிடுவதும்—பேசிவிடுவதும் போதாது. எழுத்திலும் அழகு இருக்க வேண்டும்.—பேச்சிலும் வன்மை இருக்க வேண்டும். அந்த வன்மையும், அழகும் வஞ்சகத்துடன் விரிக்கும் வலையாக அமையாமல், வாய்மையின் உறைவிடமாய் இருத்தல் வேண்டும். அதைப்போலத்தான் அழகிய கருத்துக்களை, தெள்ளு தமிழில் அள்ளித் தரும் இது போன்ற நாடகங்களும் அமைந்து—மக்களையும் கவர்ந்து—நம் கருத்து, பழத்தில் வைத்துள்ள மருந்து போல, நாட்டின் நலிவைப் போக்க பயன்பட வேண்டும் எதிர்க் கட்சித் தோழர்கள், வைதீகப்பித்துடையோர், "என்னமோ அழகாகப் பேசி நாத்திகத்தைப் பரப்புகிறார்கள்—வேறொன்றும் இல்லை" என்று சுலபமாகக் கூறிவிடுவார்கள். அவர்களுக்குக் கூறுகிறேன், அழகாகப் பேசுவதும் மட்டுமல்ல — எங்கள் ஆதாரப்பூர்வமான கருத்துரைகளுக்கு இதுவரை யாரும் தர்க்கபதில் கூறியதும் இடையாது. கம்பராமாயணம் பற்றி விவாதம் எழுந்தபோது, அழகாகப் பேசும் பாரதியாரையும் சேதுப்பிள்ளையையும் எதிர்த்து, அழகாகப் பேசவும், அழகோடு அரியதொரு மறுப்புத்தரவும், தோழர் அண்ணாத்துரைதான் முன்வந்தார். தடைபோட வேண்டும் எங்கள் நூல்களுக்கு, என்று தம் பட்டம் அடிக்கிறவர்களைக் கேட்கிறேன், எங்கள் நூல்களில் 'இன்னது தவறு' என்று எடுத்துக் காட்டி சொற்போர் நடத்த நீங்கள் தயாரா?...

பாகுமொழி பேசி பாஷாணத்தைப் பரப்ப வேண்டிய அவசியமில்லாதவர்கள் நாங்கள். காரணம், எங்கள் பணி, பணம் திரட்டவே—பதவியைப் பிடித்துக் கொண்டிருக்கவோ அல்ல!

நாடகத்திலே வரும் இலட்சியவாதியைப் போலத்தான் நாங்களும் நாட்டிலே கஷ்டப்படுகிறோம். கொள்கைக்காகச் சுயநலத்தையும்—சுகவாழ்வையும் இழக்கத் துணிபவனே இலட்சியவாதி ஆக முடியும். சுயநலத்துக்காக, இலட்சியத்தை மாற்றிக் கொண்டே இருப்பவன், இலட்சியவாதியாக இருக்க முடியாது இலட்சியவாதிகள் சாக்ரடீஸ்—வால்டேர்—அபிரகாம் லிங்கன்—சந்ததியினராய் இருக்க வேண்டும்.

இந்த நாடகத்திலே வருகிற கதாநாயகன் இலட்சியவாதிக்கும், அவன் தகப்பனுக்கும் தகராறு ஏற்படுகிறது மனஸ்தாபத்தின் முதல் காரணம் அறுபது வயதுக்கு மேல் தந்தை செய்துகொள்ளும் பொருந்தா மணம்! "பாலைக் கடந்து செல்லும்பாலனென்று நினைத்தீர் பாவையர் குலத்தை?" எனக் கேட்கும் போதும்—அறுபது வயதுக்கு மேல் திருமணமா? என்று அலறும்போதும், இந்தப் பாழடைந்த சமுதாயத்தின் பரிதாபநிலை நம், கண்முன்னே நிற்கிறது. திருமணத்தால் ஆபத்து வருமென்கிறான் தந்தை கேட்காமல் சீறிவிழுகிறார். கடைசியில் சின்னம்மாள் தன உணர்ச்சியைவெளியிட்டு அவனிடம் காதல் பிச்சைக் கேட்கிறாள். சின்னம்மாவின் நடத்தையை மகன் எடுத்துச் சொல்வதற்குமுன், இளையமனைவியின் மேலுள்ள ஆசையால் மகன்மீது பழி சுமத்தி மகன் வெளியேறக் காரணமாகிறார்தந்தை! வெளியேறிய மகன் கஷ்டப்படுகிறான். இலட்சியத்துக்காகப் போராடி தன் மனைவியையும், தோழனையும் தூக்கிலே கண்டு இறுதியில் சர்வாதிகாரம் ஒழிந்த சமதர்மக் குடியரசை நிறுவுகிறான் மதத் தலைவரையும்—மன்னனையும் வெல்கிறான் தந்தையால் வெறுக்கப்பட்டவன் மக்கள் மன்றத்துத் தலைவனாகிறான் இலட்சியம் வெற்றிபெறுகிறது.

இந்த வெற்றிப்பாதை எவ்வளவு கரடுமுரடாயிருக்கிறது—எத்தனைபேரை, பலி கொடுக்கவேண்டியிருக்கிறது-நாடகத்திலே மட்டுமல்ல தோழர்களே-நாடாளவந்தவரால் நாங்கள் படும் தொல்லையும் இப்படித்தான்! எங்கள் நாடகங்கள் தடை செய்யப்படுகின்றன. எங்கள் கருத்துக்கள் அடக்கப்படுகின்றன. எங்களிலே-திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக்கழகம் பிரிந்துவிட்டது; ஆகையால் பலஹீனப்பட்டுவிட்டார்கள் என்று, ஆளவந்தாரும் காமராஜர் போன்றவரும் எண்ணவேண்டாம் எங்கள் உழைப்புப் பயனுள்ளது என்று பெரியார் எண்ணினாலும் எண்ணாவிட்டாலும் எங்களுக்குக் கவலையில்லை-பொதுவாக அறிவு பரப்பும் எந்தக் காரியத்துக்கு அரசாங்கம் முட்டுக்கட்டை போட்டாலும் அதை எதிர்த்து நாங்கள் அறப்போர் புரிவோம் நாடகத்திலேவரும் இலட்சியவாதியைப்போல கொள்கை வெற்றிதான் பெரிதென்று எண்ணுவோம். அதற்கு மாறுபட்டவர்களை எங்கள் மனம் ஏமாற்றத் துணியவே துணியாது

மேலும் அவர் பேசுகையில், புராணகால நாடகங்களின் தன்மையையும், நாடகக் கலையில் திராவிடர் முன்னேற வேண்டிய வகைகளையும்; நாடக நடிகர்களையும் பற்றி விளக்கிப் பேசினார். தோழர் குள்ளப்பன் தனது தலைமை உரையில் நாடகத்தைப் பாராட்டிவிட்டு, "நாடகத்துக்கு வருகை தந்து வீர உரையாற்றிய தோழர் மு கருணாநிதி அவர்களுக்கு திராவிடர் கழகத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கிறேன்" எனக் கூறி நன்றியுரைத்தார். தோழர் விநாயகம் சிறிது நேரம் பேச, பின் தோழர் சிற்பியின் நன்றி கூறலுடன் இரவு 2-மணிக்கு நாடகம் இனிது முடிவுற்றது

### சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. சந்தா எண் குறிக்காமல் எழுதினால் கண்டுபிடித்து கவனிக்கமுடியாது, என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர், 'மாலைமணி'

## திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

### 12-11-49

குடியேற்றம் :— சி என். அண்ணாத்துரை, கே. ஏ. மதியழகன்.

பட்டுக்கோட்டை :— காஞ்சி. கல்யாணசுந்தரம், இரா. இளம்வழுதி.

சோமரசம்பேட்டை :— டி. கே. சீனிவாசன், இரா. துரைராசன், எஸ். நெடுமாறன், வி எஸ். மணி

### 13-11-49

திருப்பத்தூர் (வ ஆ.) :— (காலை 9 மணி) சி. என் அண்ணாத்துரை

வேலூர் (வ ஆ.) :— (மாலை 6 மணி) சி. என். அண்ணாத்துரை, சி பி சிற்றரசு.

காங்கயம் :— இரா. நெடுஞ்செழியன்.

கடம்பத்தூர் :— என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன்.

திருவாரூர் :— காஞ்சி. கல்யாணசுந்தரம், இரா. இளம்வழுதி

திருத்தங்கல் :— ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எஸ். ராமசாமி, எம். எஸ். சிவசாமி, இரா சு. தங்கப்பழம்; டி. ஆவுடையப்பன்.

## இனி நடப்பவை

குடியேற்றம்—இவ்வூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் 12 11-49 சனி மாலை 5 மணிக்கு ஆற்றில் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. கே. ஏ. மதியழகன் பி. ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

காங்கயம்-இவ்வூர் தி மு. கழகப் பொதுக்கூட்டம் ரேடியோ மைதானத்திற்கு எதிர்புறமுள்ள திடலில் 13-11-49 அன்று நடைபெறும். அதுபோது காடுப்பாளையம் தோழர் ஆர். துரைசாமி அவர்கள் தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார். தோழர் பெத்தாம்பாளையம் பழனிசாமி அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைப்பார்.

● ● ●

சோமரசம்பேட்டை-இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்கவிழா, 12-11-49 சனி மாலை 5-மணிக்கு மண்டப மைதானத்தில் நடைபெறும். அதுபோது தோழர் ஜி. பராங்குசம் அவர்கள் தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், இரா. துரைராசன், எஸ். நெடுமாறன், வி. எஸ். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

● ● ●

கடம்பத்தூர் — இவ்வூர் மறுமலர்ச்சிக் கழகச் சார்பாக 13—11—49 ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறும் அதுபோது தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் பி. ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

மாயவரம்—இவ்வூர் தி. மு. க கிளையின் செயற் குழுக் கூட்டம் 13—11—49 ஞாயிறு இரவு 8 மணிக்குக்கழகக்கட்டிடத்தில் நடைபெறும்,

● ● ●

திருத்தங்கல்—இவ்வூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் 13-11-4 ஞாயிறு மாலை 6 மணிக்குச் சோழவந்தான் தோழர் டி. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் அருப்புக்கோட்டை எம் எஸ். இராமசாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எஸ். சிவசாமி, இரா சு. தங்கப்பழம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருச்சி :—இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கூட்டம் 13 11-49 ஞாயிறு காலை 10-மணிக்கு நடைபெறும் அதுபோது செயற்குழுவை விரிவுபடுத்த இருப்பதால் இந்நகரிலுள்ள எல்லா கல்லூரி, உயர்நிலைப்பள்ளிகளிலுமுள்ள ஆர்வமுடைய மாணவர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

கடலூர்—தெ. ஆ மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம், 11-11-49 மாலை 3 மணிக்கு கடலூர் ஓ டி; சாரங்குதெரு, ஹிலால் சோப் பாக்டரியில் நடைபெறும். அதுபோது தோழர் இரா. நெடுஞ்செழியன் எம் ஏ. அவர்கள் தலைமை வகிப்பார்கள். பொருள்; மாவட்ட மாநாடு பற்றி. எனத் தோழர் இராம. பழனிசாமி அறிவிக்கிறார்.

### பிறப்பு

தேனி, நவ. 4—

தோழர் ப. தங்கமுத்து அவர்களின் துணைவியார் தோழியர் கனகரத்தினம் அம்மையாருக்கு 3—11—49-ல் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு, "தம்பித்துரை" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம், நன்றி!

(ஆ·ர்)

* * *

திருப்பூர், அக். 30—

இவ்வூர் தி. மு. க. தோழர் டி. யு. பி அப்பன் அவர்கள் துணைவியார் தோழியர் டி. பி. இராஜம்மாள் அவர்கட்கு 28—10—49 அன்று ஓர் ஆண்மகவு பிறந்தது. அம்மகவுக்கு 'செல்வமணி' எனப் பெயரிடப்பட்டது இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி.

(ஆ-ர்)

# மக்களின் வறுமைநிலைக்கு யார் காரணம்?

## அரசாங்கம் பொறுப்பை உணர்கிறதா?

### சென்னை சட்டசபையிலிருந்து கிடைக்கும் விவரங்கள்

நம் நாட்டில் வறுமை தலைவிரித்தாடுகிறது என்றால், தனவந்தர்களிடையின்று. அவர்களுக்கு நாட்டுப் பஞ்சத்தைப் பற்றியோ, நாடு சீர்கேடு உறுவதைப்பற்றியோ கவலையே இல்லை. அவர்களது வாழ்க்கை நிலையிலும் எவ்வித மாறுதலும் இல்லை. அவர்களுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்று கூறப்படுமானால், அது, அவர்களுடைய பெரும் லாபத்தில் சிறிதளவு குறைந்திருக்கலாம். அதைத் தவிர அவர்கள் கவலைப்படக்கூடியவாறு ஒன்றும் அவர்களுக்கு நேர்ந்துவிடவில்லை. ஆனால் ஏழைகள்—மத்திய வகுப்பினர்—நிலைமைதான் படுமோசம். இவர்களுடைய சம்பளம்—வருமானம், 10 சதவிகிதம் உயர்ந்தால், விலைவாசிகளோ 400 சதவிகிதம் உயர்ந்துவிடுகிறது. இவர்கள் வாழ்க்கையை எப்படி நடத்துவதென்று தெரியாமல் திண்டாடிப் பட்டினி வாய்ப்படுகின்றனர்.

* * *

சென்னை அரசாங்கம் பாதுகாப்புச் சட்டங்கள் இயற்றுவதைவிட விலைவாசிகளை 10 சதவிகிதம் குறைத்துவிடவேண்டும். இதற்காக அவசரச்சட்டம் வேண்டுமானாலும் செய்யலாம். இதுதான் உண்மையில் பொதுஜன பாதுகாப்பாக இருக்கும். இந்த வேலை மத்திய அரசாங்கத்துடையது என்று சென்னை அரசாங்கம் கூறலாம். ஆனால் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி நடவடிக்கை எடுக்கச் செய்யவேண்டும். 400 சதவிகிதம் உயர்ந்து விட்ட விலைவாசிகளில் 5 சதவிகிதம் குறைப்பதால் என்ன பயன்? மத்திய அரசாங்கம் இணங்காவிடில் இங்கு நிலைமையைச் சமாளிக்க முடியாதென்று கூறிவிடவேண்டும்.

* * *

போலீசாரிடம் விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குழந்தையிடம் அணுகுண்டை கொடுப்பதுபோலப் போலீசாரிடம் விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவை சென்னைச் சட்டசபையில் பொது அமைதிப் பாதுகாப்பு மசோதாபற்றிய விவாதத்தின்போது பேசப்பட்டவைகளிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகள். இவற்றிலிருந்து விலைவாசிகளின் உயர்வுக்குக் காரணம் மத்திய அரசாங்கமே என்பதும் இவ்விலைவாசிகளின் உயர்வால் முதலாளிகளே கொழுக்கிறார்களென்பதும் நன்கு விளங்குகிறதல்லவா?

அதே சமயத்தில், சென்னை அரசாங்கமோ, மத்திய அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து நம் மாகாண நிலையை எடுத்துக்காட்டி நம் உரிமையை வற்புறுத்திக் கேட்கவும் தைரியமில்லாத நிலையில் இருக்கிறதென்பதும், போலீசாரிடம் அளவுகடந்த அதிகாரங்களைக் கொடுத்துவிட்டு, தங்களுக்கு எதிராக

## காதரின் வாட் சென்னை வருகை

சென்னை, நவ. 10—

பிரிட்டிஷ் சபையின் சார்பில் இந்திய அரசாங்க சுகாதார மந்திரி சபையின் விருந்தினராக இந்தியாவுக்கு வந்துள்ள டேம் காதரின் வாட், நவம்பர் 17 முதல் 20 வரை சென்னை மாநிலத்தைப் பார்வையிடுவார்.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த திருமணியிலுள்ள லேடி வில்லிங்டன் சானிடோரியம், மதுராந்தகக் கிராமச் சீரமைப்பு நிலையம், கிறிஸ்தவக் கல்லூரியின் மருத்துவ நிலையம், வலூர், காவனூர் சீரமைப்பு நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட அவர் திட்டமிட்டிருக்கிறார்.

பிறகு சென்னை நகரில் சர்க்கார் ஜெனரல் ஆஸ்பத்திரி அசோக் விஹார், சிசுக்கள் மருத்துவ நிலையம், சிசுக்கள்—பெண்களுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனை, லேடி ஹோப் நர்சிங் ஸ்கூல் ஆகியவற்றைப் பார்வையிடுவார்.

## அவர்களையும் விடாதே!

சென்னை ஆட்டோமொபைல் வொர்க்கர்ஸ் யூனியனையும் சென்னை பிரஸ் லேபர் யூனியனையும் மாகாண சர்க்கார் தடை செய்துவிட்டனர். இவ்விரு யூனியன்களும் ஆதிக்கத்திலுள்ள ஸ்தாபனங்களெனக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. சென்னை மாகாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியே சட்டவிரோத ஸ்தாபனமாக்கப்பட்டிருப்பதை நேயர்களறிவர்.

இருப்பவர்களை அடக்கி பொதுக்கச் சிறையில் தள்ளிவிட்டு நிம்மதியாகத் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டுபோவதொன்றைத் தவிர, மக்களுடைய பொருளாதாரத் துன்பங்களுக்குரிய நடவடிக்கைகளில் இவர்களுக்கு அக்கறையோ, ஆர்வமோ, தைரியமோ இல்லையென்பதும் தெளிவாக விளங்குகின்றதே?

இவ்வாறு பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டுக்கொண்டு, போலீசாரிடம் விசேஷ அதிகாரங்களை ஒப்படைத்துவிட்டு மத்திய அரசாங்கம் ஆட்டிவைப்பவாறெல்லாம் ஆடிக்கொண்டு மாகாண மக்கள் நலனில் அக்கறை எப்போதும் இல்லாமல் கட்சிப் பிரசாரம் செய்து திரிந்துகொண்டுள்ள இந்த காங்கிரஸ்காரர்கள் பதவியைப் பிடித்திலலாமல் இருப்பவர்களாம். பொதுநலன் ஒன்றிலேயே அக்கறை கொண்டிருப்பவர்களாம். சென்னைச் சட்டசபைப் பேச்சுகள் இவர்களுடைய பதவிப் பித்தற்ற குணத்தையும், பொதுநல அக்கறையையும் நன்கு விளக்கிவைத்துவிட்டன.

## கிணறு வெட்டும் திட்டமும் 'அவுட்'!

1949-50ம் ஆண்டுக்கான கிணறு வெட்டும் உதவித் தொகை திட்டத்தை உடனடியாக நிறுத்திக் கொண்டு, இனி அந்த உதவித் தொகையை உழவர்களுக்கு உதவுவதில்லையென சென்னை சர்க்கார் முடிவு செய்துவிட்டனராம். இதற்கென ஒதுக்கிய ரூ $1\frac{1}{2}$ கோடி ரூபாயில் இன்னும் ரூ 50 லட்சம் வரை விநியோகிக்கப் பெறுது இருக்கும் நிலையிலேயே இப்படித் திட்டம் திடீரென்று கைவிடப்பட்டிருக்கிறது. சென்னை மாகாண சர்க்கார் மக்களுக்களிக்கும் உதவித் தொகை பெறுதற்கும் மேற்கொண்டு 'கிராண்ட்' எதுவும் தர இயலாதென மத்திய சர்க்கார் கைவிரித்து விட்டதே இதற்குக் காரணமென மாகாண சர்க்கார் விளக்கம் கூறியுள்ளது.

எதற்கெடுத்தாலும் டெல்லி சர்க்காரை எதிர்நோக்கும் நிலை நீடிக்கும் வரை இது மட்டுமல்ல, இன்னும் பற்பல சோதனைகளுக்குச் செல்லால் உள்ளாகத்தான் வேண்டியிருக்கும் பரிதாபத்துக்குரிய இச் சென்னை மாகாணம்.

தனிப்பட்டோர் நிர்வாகத்திலுள்ள செகண்டரி பள்ளிகளை சென்னை சர்க்கார் ஏற்று நடத்தத் தானிருந்தது. ஆனால் மத்திய சர்க்கார் 'கைவிரிப்பால்' அத்திட்டம் கைவிடப்பட வேண்டியதாயிற்றென அண்மையில் சென்னை கல்வி மந்திரி 'அழுதகை' நேயர்களறிவர். முதியோர் கல்வித் திட்டமும் முறிந்ததும் அதனால் தான் என்று அவர் அன்று குறிப்பிட்டதையும் அறிவோம். டெல்லியிலிருந்து ஆட்டிவைக்கும் 'சூத்திரக் கயிறு' தளர்ச்சியுறும் நாளே சென்னைக்கு நல்லநாளென்று மாகாண ஆட்சியாளரே நினைக்குமளவுக்கு நிலைமை முற்றி வந்துகொண்டிருக்கிறது. போகப் போகப் பார்ப்போம்.

## தி.மு.க.கொடிகள்

கீழ்க்கண்ட முகவரிகளில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகள் இலவசமாகத் தைத்துக்கொடுக்கப்படும்:—

(1) எஸ். பழனிவேலு,
65, வெங்கடாசல முதலித் தெரு,
மீர்சாகிப் பேட்டை,
(43-வது வட்டம்)
இராயப் பேட்டை,
சென்னை.

(2) ஆர். முத்தையா,
திராவிடன் தையல் நிலையம்
தென்கரை,
பெரியகுளம்.

(3) டி. எஸ். தங்கவேல்,
டெய்லர்,
திருச்செங்கோடு.

(4) கே பி. சுந்தரம்,
டெய்லர்,
148, புரசைவாக்கம்
ஹைரோடு,
வேப்பேரி,
சென்னை-7.

(5) வி. சக்திகணபதி,
டெய்லர்,
பணகுடி,
திருநெல்வேலி மாவட்டம்.

(6) கே. கே. தாவூத்
டெய்லர்,
பெரியகடை வீதி,
வந்தவாசி.

## ஆசிரியருக்கு முடங்கல்

### ஆதிக்க வகுப்பினரின் அட்டகாசம்!

அன்பார்ந்த ஐயா,

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி, தாலுக்கா 59 ம், செட்டிபுலம் வட்டம் கரியாப்பட்டணம் கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 3000. இவர்களில் பெரும்பாலோர் குடியிருக்கக்கூட சொந்த நிலமில்லாத பரம ஏழைகள். அன்றாடம் கூலிவேலை செய்தே தங்கள் வாழ்க்கையை நடத்திவருபவர்கள். கிராமத்தின் பெரும்பான்மையான நிலத்திற்குச் சொந்தக்காரர்கள், ஆதிக்க வகுப்பினர்தான். அவர்கள், தங்களது பரம்பரை செல்வாக்கைப் பயன்படுத்தி, அங்குள்ள ஏழைப்பாட்டாளி மக்களையும் இதர ஓரளவு சொந்த நிலமுள்ள மக்களையும் மிரட்டி, ஏமாற்றி விட்டு மேற்படி கிராமத்திலுள்ள R. S. No. 86, 87, 88, 250, 251, 252 நிலங்களில் சுமார் ஒரு லட்சம் சவுக்கு மரங்களை நட்டுப் பயிர்செய்து சாகுபடியில் விற்று வருகிறார்கள். மேற்படி நம்பர்களிலுள்ள நிலம் சர்க்கார் புறம்போக்குத்தரிசு நிலங்களாக இருந்தும், தனிப்பட்ட; அதுவும் பெரும் நிலச்சுவான்தார்களாகிய ஆதிக்க வகுப்பினரே அனுபவிக்க ஏகபோக உரிமையாக இருந்து வருகிறது.

சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் R. S. No, 86, 87-ல் சுமார் 50 வீடுகள் வரையில் கட்டிக்கொண்டு, நிலமில்லா ஏழைத்தொழிலாளர்கள் குடியிருந்து வந்தார்கள். ஒரு வாரத்திற்கு முன் வேதாரண்யம் பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வந்திருந்து அவ்வீடுகளைப் பிரிக்கச்செய்து, அதில் குடியிருந்துவந்த ஏழைப்பாட்டாளி மக்களை நிராதரவான நிலையில் விட்டு, சென்று விட்டார். அவரும் ஓர் ஆதிக்க வகுப்பைச்சார்ந்தவரே. கிராமத்தின் பெரிய தனக்காரர்களாகிய ஆதிக்கவகுப்பினரின் செக்ரட்டரியேட்டில் உயர்தர அலுவலகத்தில் செல்வாக்கோடிருக்கும் அவர்களுடைய உறவினர்களின் சொற்படி கொண்டுதான் இத்தகைய காரியங்கள் நடைபெற்றிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

வடநாட்டு அகதிகளுக்கு வாழ வகையளிக்கவும், குடியிருப்பு வசதி தேடித்தரவும் திட்டம் தீட்டுகிறது காங்கிரஸ் சர்க்கார். ஆனால் அதே நேரத்தில் இங்கே இந்நாட்டு மக்கள்; அதுவும் உழைப்பொன்றே தங்கள் தொழிலாகக் கொண்டு வாழும் ஏழைப் பாட்டாளி மக்கள் உண்ண உணவும், உடுக்க உடையும்கூட சரிவர இன்றி, குடியிருக்கவாவது சிறுசிறு குடிசைகள் கட்டி, அதுவும் சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் வாழவும் அனுமதியில்லை என்று விரட்டப்படுகின்றனர். ஏன் இந்தப் பாரபட்சம்? இதுதான் ராமராஜ்யமா?

கரியாபட்டணம் "கஸ்தூரிபா ஆதாரமருத்துவ விடுதி" திறப்பு விழாவின்போது வந்திருந்த வேதரத்னம் M. L. A. அவர்களை சுமார் 100 ஏழைத் தொழிலாளர்கள் அணுகி, தங்களுக்கென்று சிறிதும் குடியிருக்க வீடும் இல்லாதிருப்பதால், மேற்படி R. S. No, 86,87-ல் உள்ள நிலங்களில் வீடு கட்டிக்கொண்டு சாகுபடியும் செய்துவர வேண்டியதற்கு ஆவன செய்து தருமாறு மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அன்னாரின் பதில்தான் என்ன? மக்களின் சார்பிலே சட்டசபைக்கேறுவதற்காக வாய் வலிக்கப் பேசியவரை, தன்னுடைய வறண்ட வாழ்க்கையை எடுத்துக் கூறி, வகை ஏதும் செய்ய வல்லீரோ எனக் கேட்டால் புன்சிரிப்புதான் பதிலா?

கவர்ன்மெண்ட் உத்திரவு இருந்தும், சர்க்கார் புறம்போக்கு தரிசு நிலங்களில் ஏழைத் தொழிலாளர்கள் வீடு கட்டிக் குடியிருந்து கொண்டு சாகுபடி செய்துவர அனுமதியாது, பெருநிலச்சுவான்தார்களாகிய ஆதிக்க வகுப்பினர்களுக்கே அந்நிலங்கள் தாரைவார்க்கப்படுவதுதான் நீதியா? இதுதான் நேர்மையா? ஆட்சியாளர்களே! சட்டசபை உறுப்பினர்களே! காங்கிரஸ் திராவிடர்களே! பொதுமக்களே! தீர்ப்பளியுங்கள்.

இங்ஙனம்

செம்பாளூர்,
கல்லூர்,
3—11—49

அ. சண்முகம்
செயலாளர்
தி. மு. கழகம்

* * *

### அரசியலார் ஆவன செய்வார்களா?

ஐயா!

'ஷோ' என்னும் சூதாட்டக் கொட்டகைகள் பல நகரத்திற்கு அருகாமையில் உள்ள புறம்போக்கு, காமராம் போன்ற இடங்களில் சதுரியமான விளையாட்டுகள் (Silki game) என்ற பெயரால் நடைபெறுகின்றன. மேற்கூறிய விளையாட்டுகள் நடத்த கலெக்டர்களும் அனுமதி அளிக்கிறார்கள். ஆனால் அவைகள் அசல் சூதாட்டத்தைப் பகிரங்கமாக நடத்தி ஏற்கனவே வறுமையில் வாடும் மக்களைப் படுகுழியில் தள்ளி வருகின்றன. இத்தகு காட்டங்களைப் பட்டவர்த்தனமாக நடத்துவதைப் பார்த்துக்கொண்டு அவர்களைச் சூதாட்டம் ஆட அனுமதிக்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்களின் செய்கை ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கின்றது. காலணா முதல் பல ரூபாய்க் கணக்கில் அதில் விளையாடுவதற்கான விளையாட்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆதலால், சிறிய பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை சூதாட்டம் ஆடி அல்லலுறுகின்றனர். மக்களை வசீகரிப்பதற்காக அவர்கள் அந்தச் சூதாட்டக் கொட்டகையிலேயே நடனம், சர்க்கஸ் போன்ற களியாட்டங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். வேடிக்கை பார்ப்பதற்காக உள் சென்று வெளி திரும்பும் சிறார்களும், ஏழைக்கூலிகளும் கைப்பொருளை இழந்து கதிகலங்கும் காட்சி பரிதாபத்திற்குரியதாகிறது. இதனால் ஷோ நடத்தும் மோசடிக்காரனும் காலிகளுமே லாபமடைபவராகின்றனர். விழுப்புரம், விருதுநகர் போன்ற இடங்களில் மேற்கூறிய சூதாட்டங்கள் நடைபெறுவதை மக்கள் எதிர்த்து சாடிவிட்ட பிறகும் இம்மாதிரியான சூதாட்டங்களுக்கு அனுமதி (Licence) கொடுப்பது வியக்கத்தக்கதன்றோ? பெரும் அளவில் உழைப்பாளிகள் நிறைந்த பறங்கிமலையில் சூதாட்டங்கள் தலைவிரித்து ஆடுகின்றன. ஒரு சூதாட்டக் கொட்டகை பறங்கிமலையைவிட்டு கிளம்பின, இரண்டு நாட்களுக்கெல்லாம் மறுபடியும் வந்து அங்கு முகாம் அமைத்துக்கொள்ளுகிறது.

ஆதலால் மக்களை மதிமயக்கி வறியராக்கும் மேற்கூறிய 'சாதுரியமான விளையாட்டுகள்' என்ற போர்வையில் நடக்கும் சூதாட்டத்தை மக்கள் நலன் கருதி அனுமதி கொடுக்காது ஒழித்துக்கட்ட அரசியலார் ஆவனசெய்வார்களா?

பறங்கிமலை
5—11—49

இப்படிக்கு,
'மனம் நொந்தவன்'

### சென்னை மாகாண அறுவர் வாலிபால் போட்டிப் பந்தயம்

ஆயிக்கவுண்டன் பாளையம்,

நவ. 1—

இவ்வூரில் ஆண்டுதோறும் நடைபெறும் சென்னை மாகாண அறுவர் வாலிபால் (Sixes Valley Ball) போட்டிப் பந்தயம் வழக்கம்போல இவ்வாண்டும் நடைபெற இருக்கிறது. இதில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, விவரம் அறியவும். க. சாமிநாது, செயலாளர், ராமலிங்க ஞானம்பிகா வாலிபர் சங்கம், ஆயிக்கவுண்டன் பாளையம், பட்டீச்வரம் போஸ்ட், சேலம் ஜில்லா.

# புது வழி கண்டோம்- பாடுபட்டு முன்னேறுவோம்

# இலட்சிய வீரர்களே நமக்கு வழிகாட்டிகள்

## இராயலசீமாவில் பி. வி. முத்துசாமி விளக்கவுரை

[அனந்தப்பூர் ஏரிக்கரையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டத்தில் வட சென்னை பி. வி. முத்துசாமி ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் தரப்படுகிறது]

நான், திராவிடர் கழகத்திலிருந்தும், நமது பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் தலைமையிலிருந்தும் விலகி, திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனாக இன்று உங்களிடையே பேசிக்கொண்டிருக்கிறேன்.

ஏன் இந்த மாறுதல்? அவசியமென்ன? அதைப்பற்றித்தான் இந்த அரிய சந்தர்ப்பத்தில் சில உண்மைகளை விளக்கலாம் என்று விரும்புகின்றேன்.

### பெருமைப்பட்டோம்

பெரியார் பிறந்துள்ள நாற்றுண்டிலேயே பிறந்து, அவர் தலைமையின் கீழேயே தொண்டாற்றுகிறோம் என்பதை நினைக்கும் போதெல்லாம், நாம் மிகவும் பூரிப்படைந்துவந்தோம். இந்த நாட்டிலே எந்த அறிஞரும், தலைவரும், தொண்டும் செய்திராத அளவிற்குத்தன் இடையறாப் பிரச்சாரத்தாலும், உழைப்பாலும் மடமைப் படுகுழியில் வீழ்ந்திருந்த மக்களை மான உணர்ச்சியுள்ளவர்களாகத் திகழச் செய்து, முன்னேற்றத்திற்கு நல்லதோர்-வளமான புதிய பாதை வகுத்துத் தந்தவர், அந்த ஈரோட்டுக் கிழவர் என்ற ஒரே உண்மைக் காரணத்தால் தான், நாம் அவரைப் பின்பற்றுவதிலும், அவர் வழியில் பணியாற்றுவதிலும் பெருமைபட்டு வந்தோம். ஆனால், நம் புனிதமான இலட்சியம் குழி தோண்டிப் புதைக்கப்படும் என்று நாம் கனவிலும் கருதினோமில்லை. நம் உயிரினும் சிறந்த கொள்கை தலைவராலேயே சிதைக்கப்பட்டு விடும் என்று நினைப்பதற்கும் சூழ்நிலை-ஏனோ நிட்சித்தம் இடம் தராமலே இருந்துவிட்டது!

### இன்றைய நிலைமை என்ன?

அன்னை நாகம்மையார் இறந்ததும், எனக்கிருந்த ஒரு இடையூறும் நீங்கிவிட்டது. இனி நான் செத்தால் அழுவதற்கு ஆள் கிடையாது; நான் அழுவதற்கும் சாக ஆள் கிடையாது என்று சொன்ன தலைவர்; என் ஆயுள் பூராவும் தொண்டு செய்வதிலேயே கழிப்பேன்; உங்களுக்குச் சேவை செய்வதிலேயே ஆனந்தம் காண்பேன் என்று கூறின நம் பெரியார்; இந்தத் தள்ளாத வயதிலே தனக்கென ஒரு குமரியைமனைவியாக்கிக் கொண்டிருக்கிறார்! அய்யாவுக்கு வயது 72. அம்மையாருக்கு வயது 28. இது நீதியா? என்று கேட்டோம்.

இந்தத் திருமண ஏற்பாடு வேண்டாம் என்று வேண்டினோம். இந்தத் திருமணம் நமது கொள்கைக்கு முரணானது என்று சுட்டிக் காட்டினோம். தாங்கள் செய்து கொள்ளப் போகும் இந்தத் திருமணத்தால் நாடு எங்களை கேலிசெய்யும், இந்த முயற்சியை விட்டு விடுங்களய்யா என்று கெஞ்சினோம்.

எங்களுடைய வேண்டுகோள்! எங்களுடைய விம்மல்! எங்களுடைய கண்ணீர்! எத்தகைய கல்நெஞ்சினராக இருந்திருப்பினும் கொஞ்சமாவது இரக்கம் காட்டவே செய்திருக்கும் ஆனால், நம் தலைவர் வேண்டுகோளைச் செவிமடுக்கவும் மறுத்தார். விம்மலை பாசாங்கு எனப் பதட்டமாகப் பகர்ந்தார். கண்ணீரைக் கண்டும் சிரித்தார்—சிறுபிள்ளைகளின் சித்தம் இது என்றும் விடுதலை தினசரியில் எழுதினர்.

அவர் நமக்குத்தலைவராக இருந்து தொண்டே செய்துவந்திருக்கும் தவறுகள் பலப்பல! தொண்டர்களை ஒன்றுமே அவர் கவுரவித்ததில்லை. உழைப்பாளிகளை ஊக்குவித்து உயர்வு தருவதிலும் அவருக்கு உற்சாகம் இருந்தது கிடையாது! என்றாலும், நாம் எதையும் பொருட்படுத்தவில்லை ஏன் இப்படி? என்றும் கேட்டதில்லை அவர் செய்கிறார், சரி! அவர் செய்யச் சொல்கிறார், சரி—செய்வோம்! என்ற ரீதியிலேயே இருந்தோம். இது நம் குற்றமா? இல்லை! நமக்குக் கொள்கையின் மேல் இருந்தப் பற்று நம்மைக் கேட்கவிடாமல் தடுத்தது.

இந்த பொருந்தா மணம்—அவருடைய பிடிவாதம், அலட்சிய மனப்பான்மை நமக்கு ஓர் புது ஆற்றலைத் தந்தது. நம் புது வழி காணமுற்பட்டோம். அதன் விளைவு தான், திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகத்தில் தொண்டாற்றி வந்த அதிகப்படியான மத்ய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களின் ஆதரவாலும், தோழர்களின் ஒத்துழைப்பாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் துவக்கவிழாவும் 18—9—49 ல், வடசென்னை ராபின்சன் பார்க்கில்தான் மிக விமரிசையாக நடந்தேறியது.

### யார் சுயநலமிகள்?

திருமணம் கொள்கைக்கு விரோதம்; அது கூடாது! என்று சொன்னவர்களெல்லாம் சுயநலமிகளாம்! பதவி மோகம் கொண்டவர்களாம்! பொதுமக்களால் எச்சரிக்கையாகக் கவனிக்கப்பட வேண்டியவர்களாம்! துரோகிகளாம்! சதிகாரர்களாம்! இதுபோல பெரியாரே விடுதலை தினசரியில் கண்ணியத்தை மறந்து கைகூசாது எழுதியிருக்கிறார். நீங்களும் படித்திருப்பீர்களே! நான் கேட்கிறேன் தோழர்களே! இந்தக் குற்றச்சாட்டுகள் நேர்மையானவைதானா? சொல்லலாமா ஒரு பொறுப்புள்ள தலைவர் இதுபோல வெல்லாம்.

யார் சுயநலமிகள்? மனைவிமக்கள் குடும்பம் என்பதையே மறந்து இரவு பகலாக கொள்கைக்காகவே உழைத்துழைத்து, வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக்கிக் கொண்ட தொண்டர்கள் சுயநலமிகளா?

புத்தகமும் கையுமாகவே இருந்த நிலையில் கொள்கையின் காரணமாக கழகத்தில் சேர்ந்துக் கண்ட கஷ்டங்கள் பல என்றும், மனம் சோர்ந்திடாத மாணவ மணிகள் பதவிமோகம் கொண்டவர்களா?

தாளமுத்து நடராசன்களையும், அவர்களின் கல்லறைகளையும் காண வைத்த நாமா எச்சரிக்கையாக கவனிக்கப்பட வேண்டியவர்கள்?

பட்டுக்கோட்டை அழகர்சாமி உதித்த பரம்பரையினரையா பெரியார் நன்றி மறந்த துரோகிகள் என்று கூறுவது?

குடந்தை வீதிகளில் குருதியைக் கொட்டிய மறவர் கூட்டத்தை, சதிகாரர்கள் என்று சொல்ல அவருக்கு எப்படி மனம் துணிந்ததோ நாமறியோம்!

நீங்கள் சொல்லுங்கள் தோழர்களே! உங்கள் நெஞ்சம் பொறுக்குமா இந்தக் காரணங்களை! இனியும் அவர் தலைமையின் கீழேயே இருந்து தொண்டாற்ற இயலுமா நம்மால்? எனவேதான், புது கழகம் கண்டு அதன் மூலம் நமது கொள்கைகளைப் பரப்ப, கடமையை உணர்ந்து பணியாற்ற முனைந்திருக்கிறோம். நமக்கு முக்கியம் கொள்கையேத் தவிர தலைவரல்ல. அதையொப்பிக்கவே அண்ணாவைப் பொது அமைச்சராக இருக்கச் செய்து அறிவுப் பிரசாரத்தை புது வேகத்தில் தொடங்கியிருக்கிறோம். நாம் நியாயத்தின் வழியே நடக்கிறோம்; நமக்கு நம்பிக்கை இருக்கிறது; நமது முயற்சி வெற்றியுறும்.

### இலட்சிய வீரர்கள்

"உலகக் கண்ணோட்டத்தில் கொள்கைக்காக உயிர் வாழ்ந்தவர்கள் தான், சிறந்த மனிதர்களாக—இலட்சிய வீரர்களாக மதிக்கப்படுகிறார்கள்."

விஷத்தையுண்டு உயிர்நீத்த சாக்ரடீஸ், வறுமையில் உழன்ற கார்ல் மார்க்ஸ், நாட்டிலிருந்தே துறத்தப்பட்ட ரூசோ, சகல சுகபோகங்களையும் துறந்த புத்தர், நீக்கிரயானபுரூனோ, ஐன்பாட்லி, சுட்டுக் கொல்லப்பட்ட காந்தியார்-இவர்களெல்லாம் கொள்கையே பெரிது-உயிர், சொத்து, சுயதேவை பெரிதல்ல என்ற உயர் நோக்கோடு பணிபுரிந்ததினால் தான் இன்று சிறந்த மனிதர்களாக—இலட்சிய வீரர்களாக மதிக்கப்படுகிறார்கள்!

### நாம் பாடுபடுவோம்

பெரியார் கொள்கையை மீறினார். அந்த ஒரு காரணத்தாலேயே நாம் அவரை விட்டு விலகி நிற்கிறோம் அவ்வளவுதானே தவிர நமக்கும் அவருக்கும் நேரடியாக பகை கிடையாது.

திராவிடர் கழகம் அவரிடத்திலேயே இருக்கிறது. அவரே சர்வாதிகாரியாக இருந்து அதை நடத்தப்போவதாக சொல்கிறார்—நடத்தட்டும்! திராவிட முன்னேற்றக் கழகம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் திராவிடர் கழகத்தோடு மோதுதலை ஏற்படுத்திக் கொள்ளாது. அத்தகைய ஒரு அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்கவே திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாவகையிலும் எச்சரிக்கையோடு கண்காணித்துக்கொண்டு வருகிறது.

நமது கொள்கையிலும் மாற்றங்கள் இல்லை. இதுகாறும் திராவிடர் கழகத்திலிருந்து நாம் எந்தக் கொள்கைக்காகப் பணியாற்றி வந்தோமோ, அதே கொள்கைகளைப் பரப்பவே நாம் தொடர்ந்து தொண்டாற்றப்போகிறோம். திராவிட நாடு திராவிடருக்கே என்பது தான் நமது அரசியல் குறிக்கோள். மதமூட நம்பிக்கைகளை முறியடித்து, புதிய சமுதாய அமைப்பைத் தோற்றுவிப்பதே நமது அடிப்படை இலட்சியம். பொருளாதாரத் துறையில் சமதர்மத்தையும் நாட்டு நடப்பில் சமத்துவத்தையும் காண விழைவதே நம் நோக்கம்.

எனவே, தோழர்களே! நாம் பலம் பொருந்திய-எதிர்ப்புகளையும், பொறுக்க முடியாத இன்னல்களையும், சகித்துக்கொண்டுதான் முன்னேறவேண்டிய நிலையிலே இருக்கிறோம். எதிர்படும் முக்கியமான பிரச்சினைகள் எத்தனையோ உண்டு! எல்லாவற்றையும் நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

அடக்குமுறையும், தடையுத்தரவும் நம்மை அடக்கியாள்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகின்றன. தோழர் அண்ணாவை, அரசாங்கம் எந்த நேரத்திலும் சிறைபடுத்தி விடலாம்.

எதற்கும் நாம் தயாராயிருப்போம்! என்று உறுதிகூறி, எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேருங்கள் என்று அழைக்கின்றேன்" என்று பேசி முடித்தார்.

## நாட்டு நடப்பு

### குறள் மன்றம்

செயங்கொண்டம், நவ. 2—

இவ்வூர் குறள் மன்ற அமைப்புக் கூட்டம் தோழர் ஏ. ஆரோக்கியசாமி பி. எஸ். ஸி. பி. டி; அவர்கள் தலைமையில் 3-11-49 ல் நடைபெற்றது. தலைமையுரைக்குப் பின், தோழர்கள் எஸ். நடேசன், ஜீராமசாமி, புலவர், பூவராகவன் ஆகியோர் குறளின் பெருமை பற்றிப் பேசினர். பின்பு தோழர்கள் இப்ராஹீம், இலக்குவன் ஆகியோரைச் செயலாளர்களாகக் கொண்ட செயற்குழு வொன்று அமைக்கப்பட்டது. எனத் துணைச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

### தமிழ் மறுமலர்ச்சி மாநாடு

மதுரை, நவ 6—

தமிழ் மறுமலர்ச்சி மாநாட்டு வரவேற்புக்குழு, 1-11 49-ல் கூடிய கூட்டத்தில் அமைக்கப்பட்டது தலைவர்:—தி. நா. செ. மீனாட்சி சுந்தரனார்; செயலாளர்கள் :—இரா. சத்தியேந்திரன், மீ. சு. இளமுருகனார்; பொருளாளர் :—செ. நா. சுப்பிரமணியம். உறுப்பினர்கள்: மது, இ. பழனியப்பன். சி. பீர்முகம்மது. பொன்னையா. மேற்கண்ட செயற்குழு மீண்டும் 3—11—49 ல் கூடி அம்மாநாட்டை 22-1-50 ல் நடத்துவதென்றும், மாநாட்டிற்குத் தலைவராக, தோழர் கரு. முத்து தியாகராசன் அவர்களையும். இலட்சியச் சொற்பொழிவாளர்களாக தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, ம. பொ. சிவஞானம், கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோரை அழைப்பதென்றும் முடிவு செய்தது.

* * *

### அறிஞர் அண்ணாத்துரை நூலகம்

சூலூர், அக 30—

இவ்வூர் 'கோவைமுரசு' நிலையத்தில் 23—10—49 அன்று மாலை தோழர் எஸ். ஏ. மாணிக்கம் அவர்கள் தலைமையில் டி நூலக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்:—எஸ். ஏ. மாணிக்கம், துணைச் செயலாளர்:— எஸ். பி. ரங்கசாமி, விளம்பர உறுப்பினர்—என். நடராசன். மேலும் எட்டுபேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. இந்நூலகத்தின் நோக்கம் தி. மு. க. கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு பகுத்தறிவுப் பிரசாரம் புரிவது. (செ-ர்)

* * *

### கால்பந்தாட்டக் கழகம்

தூத்துக்குடி, அக். 31—

வடக்கூர் பி. எம். ராஜன் ஞாபகார்த்த கால்பந்தாட்டக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் 30-10-49ல் கூடியது. அதுபோது கீழ்க்கண்ட புதிய செயற்குழு அமைக்கப்பட்டது. தலைவர் பி. சிதம்பரம், செயலாளர்:—பி. அய்யாத்துரை, கேப்டன்:—எஸ். பரமசிவன், பொருளாளர்:—எஸ். பெரியசாமி, கன்வீனர்:—கே. கிருஷ்ணன். பின்பு டி கழகம் தி. மு. கழகத்துடன் ஒத்துழைப்பதென்றும், தோழர் பி.எம். ராஜன் அவர்களின் தாயார் இயற்கையெய்தியமைக்கு வருந்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (செ-ர்)

* * *

### புதுமைப் படிப்பகம்

தச்சநல்லூர், நவ. 3—

இவ்வூரில் "புதுமைப்படிப்பகம்" என்ற பெயருடன் ஓர் படிப்பகம், 30—10—49 ல் நிறுவப்பட்டுள்ளது. இதன் நோக்கம் மூடநம்பிக்கை, அறியாமை ஆகியவற்றை அகற்றி, அறிவுப்பிரசாரம் செய்வதே. இதற்குக் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:-சே. திருமலை; துணைச்செயலாளர்:— வர. குமரவேல்; பொருள் உறுப்பினர்கள்,—சு. வ. கோதண்டராமன், த. அய்யம்பெருமாள்; விளம்பர உறுப்பினர்கள்:— த. சு. பாலையா, தங்கராசன். மற்றும் தோழர்கள் சுப்ரமணியம், வரதராசன், ராதா, முருகேசன், இராகவன், கணேசன், இராமையா ஆகியோர் ஆலோசகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (வி-உ)

# சென்னையில் 126 புதிய வீடுகள் கட்டப்பட்டன

## ஏழைகளுக்கு ஒன்றுகூடக் கிடையாது

### சேரிகளைச் செம்மைப்படுத்தப் பணமில்லை

1949-ம் ஆண்டு முதல் 6-மாதங்களில் அரசாங்க கூட்டுறவுச் சங்கங்களால் 126 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. வீடுகள் கட்டுவதற்காகவென்று சாதாரணச் சொஸைட்டிகளுக்கு 59,05 040 ரூபாய் கடன் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வீடுகளுள் ஒன்றுகூடத் தொழிலாளிகளுக்கோ ஏழைகளுக்கோ எனக் கட்டப்படவில்லை. இவையனைத்தும் பணம் புரளும் வர்க்கத்தார் நன்மைக்காகவே கட்டப்பட்டிருக்கின்றன—ஏழைகள் நலனில் அக்கரை கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கத்தாரால். பணக்காரர்களுக்கு வீடு கட்டித்தரப் பணம் வைத்திருந்த அரசாங்கம், சேரிகள் செம்மைப்படுத்தப்பட வேண்டுமென்று கோரும்போது, நகரில் வாழும் ஏழைமக்களின் குடியிருப்பு நெருக்கடியைத் தவிர்க்க வீடுகள் கட்டித்தர வேண்டுமென்ற கோரும்போது, பணமில்லை என்று கையை விரித்துவிட மறந்துவிடுவதில்லை. சென்னை நகரசபை இது போன்ற விஷயங்களுக்காகக் கடனாகக் கேட்டாலும் கையை விரித்து விடுவதையே தன் கடனாக கொண்டிருக்கிறது சென்னையரசாங்கம். ஆனால் செல்வர்களுக்குச் சுகவாழ்வளிக்கும் வேலைகளைச் செய்ய மட்டும் கையை விரிப்பதுமில்லை, உதட்டைப் பிதுக்குவதுமில்லை. வேலை தனே நடைபெறுகிறது. இதுதானு சுதந்தர அரசாங்கத்தில் ஏழைமக்களிடம் காட்டும் அன்பு!

* * *

### தற்கொலை

பெரியகுளம், நவ. 2—

இவ்வூர் வடகரை அகோரம்மன் கோவில மாக்கிளையில் சுமார் 35 வயதுடைய இரங்கசாமி என்பவர் 2 11-49-ல் தூக்குபோட்டுத் தொங்கிக்கிடந்தார். இவர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் திருட்டு நடந்ததாகவும், டி திருட்டு சம்பந்தமாக இறந்தவர் மீது சந்தேகப்பட்டு, நிர்ப்பந்தம் செய்யப்பட்டதாகவும், அவமானம் தாங்காமல் தற்கொலை புரிந்துகொண்டதாகவும் பொதுமக்கள் பேசிக்கொள்கின்றனர். முழு விவரம் தெரியவில்லை. போலீசார் புலனறிந்து வருகின்றனர். (ஒ. கி.)

* * *

### மீன் பிடிக்கச் சென்றவர் மீளவில்லை

சென்னை, அக். 27—

26—10—49 இரவு 12 மணிக்கு மீன் பிடிப்பதற்காகக் கடலில் வலை வீசச் சென்ற 14 பேர்களில் 13பேரே திரும்பினர். திரும்பாதவருடைய பெயர் ஆறுமுகம் என்றும, அவர் கடலிலேயே மாண்டுவிட்டதாகவும் ஆனால் அவருடைய பிரேதம் இன்னும் அகப்படவில்லையென்றும் தெரிகிறது. (ஒ. கி)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.